# பிம்சவிய (நிலசக்தி) நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல் தொடர்பான செயலாற்றல் கணக்காய்வு அறிக்கை-2012



**2014**

**செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வுப் பிரிவு**

**8 ஆவது தொகுதி – பகுதி – IV**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**

| உள்ளடக்கம் | | | பக்க இலக்கம் |
|---|---|---|---|
| 1. | நிறைவேற்றுப் பொழிப்பு | | 01-05 |
| 2. | அறிமுகம் | | 05 |
| | 2.1 | பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் பின்னணி | 05-07 |
| | 2.2 | கணக்காய்விற்கான அதிகாரம் | 07 |
| | 2.3 | கணக்காய்வின் குறிக்கோளும் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தைத் தெரிவு செய்தலும். | 08 |
| | 2.4 | கணக்காய்வின் நோக்கெல்லை | 09-10 |
| | 2.5 | கணக்காய்வின் நோக்கம் | 10 |
| 3. | விரிவான கண்டுபிடிப்புகள், சிபார்சுகள் மற்றும் நிறுவனத்தின் கருத்துரைகள் | | 11 |
| | 3.1 | நிதியத்தின் பயன்பாடு | 11-15 |
| | 3.2 | நிகழ்ச்சித்திட்டத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டம் | 15-20 |
| | 3.3 | பிம்சவிய நிகழ்ச்சித்திடடத்தின் செயல்முன்னேற்றம் | 20-27 |
| | 3.4 | நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்படு தன்மையும் உரிய நிறுவனத்துடனான தொடர்பும் | 27-41 |
| | 3.5 | பதவியணியினர் முகாமைத்துவம் | 42-44 |
| | 3.6 | தரவு முறைமையினை ஸ்தாபித்தலும் அதன் பயன்பாடும் | 44-47 |
| | 3.7 | பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய சட்டரீதியான ஏற்பாடுகள் தொடர்பான அவதானிப்பு | 47-51 |
| 4. | ஒட்டுமொத்த முடிவுகள் | | 51-52 |

# 1. நிறைவேற்றுப் பொழிப்பு

கி.பி. 1815 இன் போது இலங்கை பிரித்தானிய ஆதிக்கத்தின் கீழ் இருந்ததன் பின்னர் பகிரங்கப்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் காணிக்கட்டளைச் சட்டத்தின் மூலம் இலங்கையர்களின் தனிப்பட்ட உரித்தை எழுத்து மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத காணிகள் அரசுடமையாக்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் அவ்வப்போது விதிக்கப்பட்ட பல்வேறு கட்டளைச் சட்டங்கள் மற்றும் அதிகாரச்சட்டத்தின் மூலம் இலங்கையர்களின் காணிப் பிரச்சினைக்கு பொதுவான தீர்வு கிடைக்காமையினால் தற்போது இலங்கையில் அமுல்படுத்தப்படுகின்ற காணி பதிவு செய்தல் முறைமையில் (உரித்துறுதி முறைமை) காணப்பட்ட குறைபாடுகளைக் கருத்திற் கொண்டு 1998 இன் 21 ஆம் உரிமைகளைப் பதிவு செய்யும் அதிகாரச்சட்டத்தின் கீழ் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அது 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரை உலக வங்கியின் உதவியின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட செயற்திட்டமாக அமுல்படுத்தப்பட்டதுடன் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் உள்நாட்டு நிதியத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கணக்காய்வின் நோக்கமாக இலங்கையில் காணிகளைப் பதிவு செய்யும் முறைமையில் உரித்தை உறுதிப்படுத்தும் திட்டத்திற்கு மற்றும் முறைமையின் சிக்கனத் தன்மை, செயற்திறன் மற்றும் பயனுறுதி வாய்ந்த தன்மை என்பவற்றை மதிப்பீடு செய்வதாகும். அதன் போது இது தொடர்பாக பல்வேறு பிரச்சினை கணிசமான அளவில் இருந்தமையினால் அவற்றை சரிசெய்தலின் மூலம் நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டியமையும் அவதானிக்கப்பட்டது.

அரசாங்க நிறுவனங்கள் பலவற்றின் பங்குபற்றலுடன் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரை ரூபா 618,496,335 தொகை செலவிடப்பட்டு உலக வங்கி உதவியின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட செயற்திட்டமாக அமுல்படுத்தப்பட்டு 2007 ஆம் ஆண்டு தொடக்கம் உள்நாட்டு நிதியத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற இச் செயற்திட்டத்திற்காக 2007 – 2011 ஆம் ஆண்டு காலப்பகுதிக்காக ரூபா 1,956,083,802 தொகை உள்நாட்டு நிதியத்திலிருந்து செலவிடப்பட்டு விநியோகிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட உரித்துறுதிச் சான்றிதழின் அளவு 450,000 ஆக இருந்த போதிலும் 398,350 காணிக்கூறுகள் அளவை செய்யப்பட்டு 48,890 கூறுகளுக்கு மாத்திரம் சான்றிதழ்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு தயாரிக்கப்பட்ட மொத்த உரித்துறுதிச் சான்றிதழ்களில் 50 சதவீதமான அளவை உரிய காணி உரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்க முடியாதிருந்தது. இந்த நிலைமை தொடர்பாக நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் போது காணப்பட்ட பலவீனங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான போதியளவான அறிமுகப்படுத்தல் மக்களிடையே காணப்படாமையும் தாக்கமளித்திருந்தது.

2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியில் இச் நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகையில் 40 சதவீதம் பதவியணியினருக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் இதற்காகச் செலவிடப்பட்ட ஏனைய செலவினங்களுக்கிடையே நிகழ்ச்சித்திட்ட நோக்கங்களிலிருந்த புறம்பாகச் செய்யப்பட்ட செலவினங்களாக இருந்தது. இச் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அளக்கப்படுகின்ற காணிக்கூறுகளின் அளவு மற்றும் அதன் கீழ் விநியோகிக்கப்படுகின்ற சான்றிதழ்களுக்குரிய கூறுகளின் எண்ணிக்கையை விட செய்யப்பட்ட செலவினங்கள் அதிகரித்திருந்தமையினால் அதன் செயலாற்றல் மட்டம் திருப்திகரமானதாக இருக்கவில்லை.

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு நில அளவைத் திணைக்களம், காணி உரிமை நிர்ணயத் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களம் என்பன தனித்தனியாக பங்களித்திருந்தது. உரிய தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமை அந்த நிறுவனத்தினால் பேணப்பட்டிருந்த போதிலும் அவைகள் ஒன்றுக்கொன்று தொடர்பற்றதாகக் காணப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும் வெற்றிகரமான காணி முகாமைத்துவத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் உரிய விபரங்களைச் சேகரித்தல், தகவல்களை ஏனைய நிறுவனங்களுக்கு பாமாற்றுவதற்கு முடியுமான வரை கணனிமயப்படுத்துதல் மற்றும் அதன் மூலம் ஸ்தாபிக்கப்பட வேண்டிய காணித் தரவு வங்கியின் செயல்முன்னேற்றமும் திருப்திகரமானதாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

1998 இன் 21 ஆம் இலக்க உரிமைகளைப் பதிவு செய்யும் அதிகாரச்சட்டத்தின் கீழ் உள்ள சட்டரீதியான பிரச்சினைகள், இடையூறுகள் மற்றும் முறையீடுகளைக் குறைத்தல் மற்றும் அவைகளைத் திருத்துவற்கு 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை சிற்சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் அப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

அரசாங்க செலவினம் தொடர்பாக பொதுத் திறைசேரியின் பூரண மேற்பார்வைக்கு உள்ளாக்கப்பட வேண்டியிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்குத் தேவையான நிதியேற்பாடுகளை வழங்குதல் தொடர்பாக இந்த அறிக்கையில் காண்பிக்கப்படுகின்ற அவதானிப்புக்கள் மற்றும் கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் பிரகாரம் செலவினம் முகாமைத்துவம் தொடர்பாக திருப்திகரமானதாக பின்பற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

நிறுவனங்களுக்கிடையே தொடர்பாடல் செயற்பாடுகளை முறைமைப்படுத்துதல், உத்தியோகத்தர்களின் செயலாற்றல் நிலைமைகளை அதிகரித்தல், பொதுமக்கள் இது தொடர்பாக விரிவாக தெரியப்படுத்துதல் மற்றும் செலவினக் கட்டுப்பாட்டை தவிர்க்கும் போது தற்போது காணப்படும் காணி தொடர்பான அதிகாரச்சட்டத்தில் இனங்காணப்பட்ட

குறைபாடுகளை சரிசெய்து அமுல்படுத்துதல், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தமை வரைவு அறிக்கையின் பதிலாக கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அச் செயற்பாடுகளின் மூலம் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை பயனுள்ளாதாக எதிர்காலத்தில் முன்னேற்றிக் கொள்ள முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2. அறிமுகம்

### 2.1 பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் பின்னணி

#### 2.1.1 காணி பதிவு செய்தலின் கடந்த கால நிலை

கி.பி. 1815 இன் போது இலங்கை முழுமையாக பிரித்தானிய ஆதிக்கத்தின் கீழ் இருந்ததன் பின்னர் பிரித்தானிய ஆட்சியாளர்களினால் 1840 இன் 12 ஆம் இலக்கம் என்ற பெயரில் பகிரங்கப்படுத்தப்பட்ட அரசாங்க காணிக் கட்டளைச் சட்டத்தின் மூலம் தனியார் உரிமை எழுத்து மூல சான்றின் அடிப்படையில் உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத சகல காணிகளும் அரசுடைமையாக்கப்படும் என்ற அறிவித்தலுடன் இலங்கையர்களின் இலட்சக்கணக்கான ஏக்கர் காணிகள் அவர்களுக்கு உரித்தற்றுப் போயிருந்தன.

இதன் காரணமாக எழுந்த எதிர்ப்புகளைச் சமப்படுத்தி அரசாங்க மற்றும் தனியார் காணிகள் தொடர்பான தீர்வினைப் பெறுவதற்காக 1897 இன் 01 ஆம் இலக்க ‘‘முடுபிம’’ கட்டளைச்சட்டம் உருவாக்கப்பட்டது. அதன் மூலமும் ஏற்பட்ட குறைபாடுகளைக் குறைப்பதற்காகவும், அரசாங்க மற்றும் தனியார் காணிகளை ஒழுங்குபடுத்தல் கட்டளை பகிரங்கப்படுத்தப்பட்டு இறுதியில் கிராம வரைபடம் தயாரிப்பதற்காக 1931 இன் 20 ஆம் இலக்க காணி ஒழுங்குபடுத்தல் கட்டளைச் சட்டம் அமுலாக்கப்பட்டது. இந்த அதிகாரச்சட்டத்தை அமுல்படுத்துவதற்காக காணி உரிமை நிர்ணயத் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் 1935, 1955 மற்றும் 1987 போன்ற ஆண்டுகளில் அப்போதைய அரசின் கீழ் காணப்பட்ட பல காணி ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை பிரதானமாகக் கருத்திற் கொள்ள வேண்டியிருந்தது. அவ்வாறே நாட்டில் இடம்பெறுகின்ற மனிதப்படு கொலைகளில் 62 சதவீதம் அளவில் காணிகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்பட்ட பிணக்குகள் என புள்ளிவிபரங்களிலிருந்து தெளிவாகியது. அதற்கு மேலதிகமாக காணி வழக்கு மற்றும் காணிப் பிணக்குகளினால் சமூகத்திலும் கணிசமான எண்ணிக்கையில் பிரச்சினைகள் உருவாகியிருந்தமையினால் இலங்கையில் 1980 தசாப்தங்களில் ஏற்பட்ட இளைஞர் கொந்தளிப்பினையும் சச்சரவுகளையும் கவனத்திற் கொண்டதன் பின்னர் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய 1998 இன் 21 ஆம் இலக்க உரிமைகளைப் பதிவு செய்தல் அதிகாரச்சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.1.2 பிம்சவிய கருதுகோளைச் சமர்ப்பிப்பதற்கு காரணமான விடயங்கள்

1863 இன் 8 ஆம் இலக்க ஆவணங்களைப் பதிவு செய்யும் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் காணிகளைப் பதிவு செய்தல், அதாவது உரித்துறுதிகள் பதிவு செய்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. உரித்துறுதிகளைப் பதிவு செய்தல், ஆவணங்களைப் பதிவு செய்தல் அதிகாரச்சட்டத்தின் மூலம் கட்டாயமின்றியிருந்த போதும் முறையற்ற விதத்தில் பதிவு செய்யும் நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அதன் பிரகாரம் காணிகளைப் பதிவு செய்தல், ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் காணி அல்லது அதன் உரிமை பதிவு செய்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உரித்துறுதி பதிவு செய்யும் முறைமையின் கீழ் உரித்துறுயில் விபரிக்கப்பட்ட காணியின் அளவு மற்றும் எல்லை நிலத்தின் பிரகாரம் சரியாக உள்ளமையை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. அவ்வாறே ஒரு காணிக்காக பல உரித்துறுதிகள் காணப்பட்ட போதிலும் பதிவு செய்வதற்கு இந்த முறையில் முடியுமாக இருந்தது. காணி பதிவு செய்யும் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது உரித்துறுதி போலியானதாக இருந்த போதிலும் ஆரம்பத்தில் பதிவுசெய்ததன் அடிப்படையில் அதற்கு அதிக அங்கீகாரம் உரித்தானது. இவ்வாறான குறைபாடுகளினால் இலங்கையின் காணி தொடர்பாக தீர்க்கப்படாத பிரச்சினைகள் கடந்த காலங்கள் தொட்டே நிலவிவருகின்றமை அவதானிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட விடயங்களை கவனத்திற்கு கொண்டு காணியின் உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஆவணங்களைப் பதிவு செய்யும் முறைக்குப் பதிலாக அரசாங்கத்தின் பொறுப்புடன் கூடிய காணியின் உருவாக்கம், அதன் எல்லை மற்றும் அளவுகளைக் குறிப்பிடுகின்ற எல்லை வரைபடம் உள்ளடக்கப்பட்டு இனங்காணக்கூடிய விஷேட அடையாள இலக்கத்தின் கீழ் உரித்து மற்றும் உரித்தின் தன்மை என்பன காண்பிக்கப்பட்டு காணியின் அடிப்படை உரித்தை பதிவு செய்வதற்காக 1998 இன் 21 ஆம் இலக்க உரிமைகளைப் பதிவு செய்யும் அதிகாரச் சட்டம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

### 2.1.3 பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற முறை

இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு மற்றும் பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு என்பன தொடர்புபட்டு செயற்படுகின்றது. காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள காணி உரிமை நிர்ணயத் திணைக்களம் மற்றும் நில அளவையாளர் திணைக்களத்தின் உதவி மற்றும் பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழுள்ள பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் உதவியின் அடிப்படையில் இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய சட்டரீதியான ஏற்பாடுகளாக 1998

இன் 21 ஆம் இலக்க உரிமைகளைப் பதிவு செய்யும் அதிகாரச்சட்டம் காணப்படுகின்றது.

அதன் பிரகாரம் இந்த நிகழ்ச்சித்திட்டம் 02 அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களின் முக்கிய தொடர்புடன் அமுல்படுத்தப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரை உலக வங்கியின் உதவியின் கீழ் தீர்மானிக்கப்பட்ட செயற்திட்டமாக பலாங்கொடை, திவுலப்பிட்டிய, உடபலாத்த, தமுத்தேகம மற்றும் ஹோமாகம போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

அதன் பின்னர் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் உள்நாட்டு நிதியத்தின் மூலம் திஸ்ஸமஹாராம, லுனுகம்வெஹர, சியம்பலாண்டுவ, ரிதிமாலியத்த, வெலிகேபொல, மீரிகம, மொரட்டுவை, உடுநுவர, ரிதீகம, மெதிரிகிரிய, கந்தளாய், தலாவ மற்றும் ராஜாங்கனை போன்ற 13 பிரதேச செயலகப் பிரிவுகள் வரை பரவலாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருக்கின்றது.

## 2.2 கணக்காய்விற்கான அதிகாரம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154 ஆவது உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

## 2.3 கணக்காய்வின் குறிக்கோளும் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தைத் தெரிவு செய்தலும்

இலங்கையின் ஊழியர் படையணியில் 50 சதவீதத்திற்கு மேல் விவசாயச் செய்கையில் இருப்பதனால் நாட்டின் தேசிய வருமானம் மற்றும் அந்நிய செலாவணி மிகவும் முக்கியமான சதவீதத்தை விவசாய உற்பத்திகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றமையினால் நாட்டிற்கான காணி என்ற வளம் முக்கிய மூலமாகையால் காணி தொடர்பாக அபிவிருத்தி செய்யும் முகாமைத்துவத்தை ஏற்படுத்துவதற்காக அவைகளை முறையாக பதிவு செய்யும் முறைமையொன்று பேணப்பட வேண்டியமையை அரசாங்கம் இனங்கண்டிருந்தது.

அதன் பிரகாரம் நாட்டின் காணிப் பிணக்குகளைத் தீர்க்கும் போது பயனுறுதித் தன்மையை அதிகரித்து பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் மக்களிடையே நிரந்தரமாகக் காணப்பட்ட காணிப் பிணக்குகளைக் குறைப்பதற்கும் சமூகத் தொடர்பு மற்றும் சகவாழ்வை ஏற்படுத்திக் கொள்வதற்கும் காணிகளைப் பதிவு செய்யும் நிகழ்ச்சித்திட்டம் மூலம் காணித்தரவு வங்கியொன்றை உருவாக்கி அதில் நாட்டிலுள்ள சகல காணிகளின் தகவல்களையும் உள்ளடக்கும் இலக்கினை எய்தி

பிம்சவியவின் கருதுகோள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக வருடாந்தம் பொதுத்திறைசேரியினால் பாரியளவான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

செயலாற்றல் கணக்காய்வில் மேற்கூறப்பட்டதன் பிரகாரம் அரசாங்கத்தினால் செய்யப்பட்டுள்ள பாரியளவிலான செலவினப் பொறுப்பை ஏற்று செயற்படுத்தப்பட்ட பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் சிக்கனத் தன்மை, செயற்திறன் தன்மை மற்றும் பயனுறுதித்தன்மையை பரீட்சிப்பதே அடிப்படை நோக்கமாகவுள்ளது. அதன் மூலம் காணி பதிவு செய்யும் முறைமையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் மற்றும் தரவு வங்கிக்கும் காணி தொடர்பான தரவுகளை உள்ளடக்கும் செயல்முன்னேற்றத்தை பரீட்சித்தல்களும்.

## 2.4 கணக்காய்வின் நோக்கெல்லை

(அ) கணக்காய்விற்காக பேணப்பட்ட காலநேரம் மற்றும் மனிதவள அளவின் அடிப்படையில் செயலாற்றல் கணக்காய்வின் அளவு தெரிவு நடைமுறைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததுடன் எமது கணக்காய்விற்குரிய பகுதிகளின் பரிசீலனைகள் மேல்மாகாணத்தின் ஹோமாகம மற்றும் மொரட்டுவை பிரதேசங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் போது அரசாங்கத்தின் காணி தொடர்பான உரித்தைப் பதிவு செய்ய வேண்யிருந்த போதிலும் சான்றிதழ் வழங்கப்படாமையினாலும் தற்போது காணிப் பிணக்குகள் அதிகமாக எழுவது தனியார் காணி தொடர்பானமையினாலும் காணி ஆணையாளர் திணைக்களத்திற்குரிய செயற்பொறுப்புக்கள் தொடர்பாக விரிவான பரிசீலனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(அ) செயலாற்றல் கணக்காய்வின் போது நிகழ்ச்சித் திட்டத்தின் வினைத்திறனான சிபார்சுகள் மற்றும் தொடர்ச்சியான கணக்காய்வு அவதானிப்புக்கள் மற்றும் கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

## 2.5 கணக்காய்வின் நோக்கம்

கணக்காய்வின் நோக்கம் பின்வருமாறு இருந்தது.

(அ) இலங்கையில் காணி பதிவு செய்தல் உரித்துறுதி முறையை உரித்துறுதிச் சான்றிதழ் முறைக்கு மாற்றும் முறைமையால் பொருளாதார பயனுறுதி வாய்ந்த மற்றும் செயற்திறனாக உள்ளமையை மதிப்பிடுதல்.

(ஆ) தெரிவு செய்யப்பட்ட காணிக் கூறுகளுக்காக உரித்துறுதிச் சான்றிதழ் கையளிக்கும் முறைமையை மதிப்பீடு செய்தல்.

(இ) அரசாங்க மற்றும் தனியார் பிரிவுகளுக்கு உரித்துறுதிச் சான்றிதழ் வழங்குவதற்காக அரசாங்கத்தின் நிதியினை ஈடுபடுத்தும் ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்படுகின்றமையை மதிப்பிடுதல்.

(ஈ) வெற்றிகரமான காணி முகாமைத்துவத்திற்குப் பயன்படும் வகையில் உருவாக்கப்படுகின்ற காணி தரவு முறையை ஸ்தாபித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பாக மதிப்பிடுதல்.

(உ) உரித்துறுதிச் சான்றிதழ் கையளிப்பதற்கு நிகழ்காலத்திற்குரிய அதிகாரச்சட்டத்தில் உள்ள தடைகள் மற்றும் இடையூறுகளைக் குறைப்பதற்கான திருத்தங்களின் செயல்முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல்.

## 3. விரிவான கண்டுபிடிப்புகள், சிபார்சுகள் மற்றும் நிறுவனத்தின் கருத்துரைகள்

கணக்காய்வில் அதவதானிக்கப்பட்ட விரிவான கலந்துரையாடல், அதற்குரிய சிபார்சுகள் மற்றும் நிறுவனத்தின் கருத்துரைகள் என்பன பின்வருமாறு காண்பிக்கப்பட்டுள்ளது.

### 3.1 நிதியத்தின் பயன்பாடு

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரை "காணி உரிமை மற்றும் அதனுடன் தொடர்புடைய சேகைள் செயற்திட்டம்" (Land titling and related services project) ஆக உலக வங்கியின் உதவியின் கீழ் செயற்திட்டமாக அமுல்படுத்தப்படுகின்றது. அக்கால எல்லையினுள் இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 618,496,335 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பின்னர் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் உள்நாட்டு நிதியத்தின் மூலம் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுவதுடன் நிகழ்ச்சித்திட்டத்தில் பிரதானமாக 04 அரச நிறுவனங்கள் தொடர்புபடுகின்றன. 2007 தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக உள்நாட்டு நிதியத்திலிருந்து ரூபா 1,956,083,802 தொகை செலவிடப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

#### 3.1.1 நிதியேற்பாட்டை வழங்குதலும் பயன்பாடும்

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டு செலவினத் தலைப்பின் இரண்டாவது நிகழ்ச்சித்திட்டத்தின் 03 ஆம் இலக்க செயற்திட்டத்தின் கீழ் தேவையான

நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இதன் போது நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டுமொத்த செயல்முன்னேற்றம் தொடர்பாக போதியளவான மதிப்பீட்டைச் செய்யாமல் உரிய நிதியேற்பாடு வருடாந்தம் வழங்கப்பட்டிருந்தது. இந்த வருடாந்த நிதியேற்பாட்டில் 2008, 2009 மற்றும் 2011 போன்ற ஆண்டுகளில் சேமிப்பு முறையே 15 சதவீதம், 37 சதவீதம் மற்றும் 52 சதவீதமாக இருந்தது. இந்தச் சேமிப்புக்கள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் உரிய மதிப்பீடு செய்யப்பட்ட செலவினங்கள் சரியாக எதிர்வு கூறப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறு.

| விபரம் | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு | 500,000,000 | 500,000,000 | 350,000,000 | 1,000,000,000 |
| பயன்பாடு | 425,377,720 | 312,721,386 | 340,758,510 | 480,713,451 |
| சேமிப்பு | 74,622,280 | 187,278,614 | 9,241,490 | 519,286,549 |
| நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு | 15 | 37 | 3 | 52 |
| பதிவுசெய்யப்பட்ட உரித்துறுதிகளின் எண்ணிக்கை | 3,450 | 5,242 | 14,501 | 25,697 |

### 3.1.2 உரித்துறுதிச் சான்றிதழுக்கான கிரயம்

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2007 தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை அதனுடன் தொடர்பான அரசாங்க நிறுவனத்தினால் ரூபா 1,956,083,802 தொகை செலவில் தயாரிக்கப்பட்ட உரித்துறுதிச் சான்றிதழின் அளவு 54,875 ஆக இருந்தது. அதன் பிரகாரம் உரித்துறுதிச் சான்றிதழுக்காக செலவிடப்பட்ட அலகுக்கான கிரயம் ரூபா 35,646 ஆகும். 2007 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2011 ஆம் ஆண்டிற்காகச் செலவிடப்பட்ட செலவினமும் அதிகரித்திருந்ததுடன் சான்றிதழ் விநியோகிக்கப்பட்ட அளவும் அதிகரித்திருந்தமையினால் உரித்துறுதிச் சான்றிதழுக்கான கிரயமான அலகுக்கான கிரயமும் குறைவடைந்திருந்தது. எனினும் 2010 மற்றும் 2011 போன்ற ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை கருத்திற்கொள்ளக் கூடிய அளவில் முன்னைய ஆண்டுகளில் அளவிடப்பட்ட காணிக்குரிய காணிகளில் எனினும் தயாரிக்கப்படாது காணப்பட்ட உரித்துறுதிச் சான்றிதழ்கள் இந்த ஆண்டின் போது பூரணப்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டில் சான்றிதழ் ஒன்றின் கிரயம் குறைவடைவதற்கு ஏனைய விடயங்கள் தாக்கமளித்திருந்தமை வெளிப்படுத்தப்படவில்லை. அதன் பிரகாரம் ஒட்டுமொத்த

செயற்பாடுகளின் செயற்திறனை அதிகரிப்பதன் மூலம் உரித்துறுதிச் சான்றிதழுக்காக ஏற்படும் ஒரு அலகுக்கான கிரயத்தை மேலும் குறைக்க முடியுமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.1.3 பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக செய்யப்பட்ட விசேட மீண்டெழும் செலவினம்

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக தொடர்புடைய நிறுவனங்களினால் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை நிகழ்ச்சித்திட்டத்திற்கு நேரடியாக பங்களித்தது என இனங்காணப்பட முடியாத கட்டிட பராமரிப்பு, இயந்திர பராமரிப்பு மற்றும் பிரயாணச் செலவுகள் போன்ற மீண்டெழும் செலவினங்களுக்காக ரூபா 106.8 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது.

அவ்வாறே நில அளவையாளர் திணைக்களம் மற்றும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செலவினத் தலைப்புக்களில் செலவிடப்பட வேண்டிய கட்டிடப் பராமரிப்புச் செலவினமான ரூபா 16.4 மில்லியன் மற்றும் வாகனப் பழுதுபார்த்தல் மற்றும் வாகனக் காப்புறுதி செய்தலுக்கான செலவினமான ரூபா 2.7 மில்லியன் தொகையும் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியேற்பாட்டிலிருந்து செலவிடப்பட்டிருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

### 3.1.4 பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்கான வாகனம் மற்றும் இயந்திரங்களுக்கான செலவினங்கள்

இந்த செயற்திட்டத்தின் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சை உள்ளடக்கிய மூன்று திணைக்களங்களுக்காக வாகனம் மற்றும் உபகரணங்களுக்காகச் செய்யப்பட்ட செலவினங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து ரூபா 12,128 மில்லியன் தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட நில அளவை உபகரணங்களை உள்ளடக்கிய பொருட்கள் நில அளவையாளர் திணைக்களத்தின் பொருட்பதிவேடுகளில் பதியும் போது பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து பிரதேச அலுவலகங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட அளவு மற்றும் நில அளவையாளர் திணைக்களத்தில் எஞ்சிய அளவு என்பவற்றை இனங்காணக்கூடிய வகையில் பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட உபகரணங்கள் அந்த நிகழ்ச்சித்திட்டத்தின் சொத்தாக இனங்காணக்கூடிய வகையில் அடையாளமிடப்படாமையின் காரணமாக தலைமை அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்

வழங்கப்பட்ட பொருட்கள் என்பவற்றை தனித்தனியாக இனங்காண முடியாதிருந்தது.

(ஆ) நில அளவையாளர் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட 40 வாகனங்களில் 10 வாகனங்கள் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் அப்போது அமுல்படுத்தப்படாத பிரதேசங்களின் நில அளவைத் திணைக்களத்தின் அலுவலகங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சிற்குக் கையளிக்கப்பட்ட 16 வாகனங்களில் 06 வாகனங்கள் அமைச்சின் பிரத்தியேக பதவியணியின் உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்பட்டமையினால் அந்த சொத்துக்கள் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளுக்காக ஈடுபடுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்படவில்லை.

**தாற்பரியங்கள்**

---------------------------

(அ) 2009 ஆம் ஆண்டின் செலவினத்திற்கு ஒப்பீடாக 2010 ஆம் ஆண்டின் போது இந்த நிகழ்ச்சித்திட்டம் கவனத்திற்கொள்ளக் கூடிய செயல்முன்னேற்றத்தை தோற்றுவிக்காதிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி 2010 ஆண்டை விட இரண்டு மடங்கிற்கு அண்மித்த அளவில் அதிகரித்திருந்தது. அவ்வாறே பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்கான கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் செயலாற்றல் எதிர்பார்த்த மட்டத்தில் காணப்படாதிருந்த போதிலும் ஒதுக்கப்பட்ட நிதியில் அதிகமான அளவு எஞ்சியிருக்கும் போது வருடாந்தம் நிதியத்தின் ஒதுக்கீடுகள் அதிகரித்துக் காணப்பட்டது.

(ஆ) பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தை மேலும் வெற்றியடையச் செய்வதற்காக அரசாங்க மட்டத்தில் துரிதமான பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல், மூன்று திணைக்களத்திற்குரிய அலுவலகங்களை பிரதேச மட்டத்தில் ஒன்றிணைத்தல் மற்றும் அந்த அலுவலகங்களின் கோவைகளை முறையாகப் பாதுகாத்தல் தேவையான உபகரணங்களை வழங்குதல் மற்றும் முறைமைகளை ஏற்படுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக வருடாந்தம் வழங்கப்படுகின்ற நிதியேற்பாடுகளிலிருந்து நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் பெற்ற வாகனங்கள் மற்றும் உபகாரணங்கள் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக

ஈடுபடுத்துவதற்குப் பதிலாக உத்தியோகத்தர்களின் ஏனைய தேவைகள் மற்றும் செயற்திட்டத்திற்கு வெளியிலுள்ள நபர்களினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**சிபார்சுகள்**

(அ) வருடாந்த பாதீட்டின் மூலம் நிகழ்ச்சித்திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதியேற்பாட்டை அதிகரிக்கும் போது கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றம் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரினால் மீளாய்வு செய்யப்பட வேண்டும். அவ்வாறே உரித்துறுதிச் சான்றிதழுக்காக ஏற்படுகின்ற கிரயத்தைக் குறைப்பதற்காக முறையான கட்டுப்பாட்டு முறைமையின் மூலம் செலவினங்களைக் கட்டுப்படுத்துதல்.

(ஆ) பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய வளங்களை இனங்காண்பதற்கும் அவற்றை உச்ச அளவில் பயன்படுத்துவற்காக முறையான பொருட்பதிவேட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறே இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு நேரடியாகப் பங்களிக்காத பிரிவுகளுக்குரிய சொத்துக்களை கையளிக்கும் போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதுடன் நிறுவனங்களைப் பராமரிக்கும் செலவினங்களுக்காக பாரியளவில் செலவினங்களைச் செய்யாது நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றத்தை அதிகரிப்பதற்குத் தேவையான அடிப்படைச் செலவினங்களை இனங்கண்டு செலவினங்களைச் செய்வதற்கான படிமுறைகளை எடுத்தல்.

**நிறுவனத்தின் கருத்துரைகள்**

**தொடர்பு 3.1.1 ஆம் பந்தி**

திட்டமிடப்பட்ட இலக்கை அடைந்து கொள்ளும் எதிர்பார்ப்புடன் நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் நிகழ்ச்சித்திட்டத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களின் அடிப்படையில் எதிர்பார்க்கப்பட்ட மனித மற்றும் பௌதீக வளங்கள் கிடைக்காமையினால் நிதி சேமிக்கப்பட்டிருந்ததுடன் திறைசேரியினால் வழங்கப்பட்ட கட்டுநிதி போதியளவில் இல்லாமையினால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சேவைகளுக்காக பணத்தைச் செலுத்துவதற்கும் முடியாதிருந்தது.

**தொடர்பு 3.1.2 பந்தி**

எவ்வித காரணமுமின்றி ஒரு குறிப்பிட்ட காலத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேசத்தின் காணிகளுக்காக உரித்துறுதிச் சான்றிதழ் வழங்குதல் கஷ்டமான விடயமாகும். இருந்த போதிலும் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் போது காணி தொடர்பாக தகவல்களைச் சேகரித்து கணனிமயப்படுத்துவதனால் காணி தொடர்பான தரவு முறைமை உருவாகுவதுடன் அந்த தகவல்கள் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் பாவனைக்காகவே இருந்தது. அதன் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்திற்காக செய்யப்பட்ட செலவினங்களில் ஆரம்ப காலத்தின் அதிகரித்த கிரயத்தைச் செய்த போதிலும் அது எதிர்காலத்தில் குறைந்த கிரயத்தை உடையதாக இருக்கும்.

**தொடர்பு 3.1.4. (அ) பந்தி**

''நிகழ்ச்சித்திட்டத்திற்குப் பெறப்பட்ட வளங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் வெளி உத்தியோகத்தர்களின் பாவனைக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. நிகழ்ச்சித்திட்டத்தின் வளங்களைப் பயன்படுத்தும் சகலரும் நிகழ்ச்சித்திட்டத்தில் நேரடியாக அல்லது மறைமுகமாக தொடர்புபடுகின்ற உத்தியோகத்தர்களாவர்.''

**தொடர்பு 3.1.4 (ஆ) பந்தி**

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்கள் உரிய வகையில் நியமிக்கப்பட்டிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்படு தன்மையில் தடையினை ஏற்படுத்தாத வகையில் நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

**தொடர்பு :- தாற்பரியங்கள் (அ) பந்தி**

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நிகழ்ச்சித்திட்டத்திற்காக நடைபெற்ற கலந்துரையாடலின் போது செயல்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டு தேவையான சந்தர்ப்பங்களுக்கிணங்க இனங்காணப்பட்ட திருத்தங்கள் வேறாகச் செய்யப்படுகின்றது.

**தொடர்பு :- தாற்பரியங்கள் (ஆ) பந்தி**

விரிவான பிரச்சாரத் திட்டமொன்றை இனங்கண்டு அதற்காக உரிய பிரச்சார நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதுடன் நிகழ்ச்சித்திட்டத்தை பிரதேச அலுவலகங்கள் ஒவ்வொன்றிற்கும் கிட்டிய வகையில்

ஸ்தாபிப்பதற்கும், காணி பதிவு செய்யும் அலுவலகங்களின் தகவல்களை ஒரு நிலைப்படுத்தி கணனிமயப்படுத்துவதற்குரிய ஆரம்ப செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## 3.2 நிகழ்ச்சித்திட்டத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்ட விசேட ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டம்

இச் செயற்திட்டத்தை செயற்திறனாகவும் பயனுறுதியாகவும் அமுல்படுத்தும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய பல்வேறு பதவியணி தரங்களுக்காக ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறைமையொன்று அமுல்படுத்தப்படுவதுடன் அந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறைமைக்கு ஒப்பீடாக செயற்திட்டத்தின் வினைத்திறன் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் பொதுநிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2010 மார்ச் 22 ஆந் திகதிய ஈஎஸ்ரீ/8/ஏஎல்ஓடபிள்யூ/04/0033 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் நில அளவையாளர் திணைக்களத்தில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாதாந்தம் அளவிடக்கூடிய ஆகக்குறைந்த காணிக்கூறுகளின் அளவு 1998 ஆம் ஆண்டின் போது தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் அப்போதைய அளவைகளுக்காக தியொடலைட் என்ற பெயருடைய உபகரணம் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அளவிடல் அலகு காலங்கடந்திருந்தது. அந்த உபகரணங்களின் மூலம் அளவிடல் நடவடிக்கைகளைச் செய்யும் போது செயலாற்றல் ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதிலும் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக நிகழ்காலத்தில் GPS மற்றும் Total Station என்ற குறுகிய காலத்தின் போது அதிகளவான அளவிடைகளின் அளத்தல்களை மேற்கொள்ளக்கூடிய நவீன தொழில்நுட்பத்தையுடைய உபகரணம் பயன்படுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் மாதாந்தம் அளக்கப்படுகின்ற ஆகக்குறைந்த காணிக்கூறுகளின் அளவை அதிகரிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு நியமிக்கப்பட்ட நில அளவை உத்தியோகத்தரில் ஒரு நில அளவை உத்தியோகத்தருக்கு காலாண்டிற்கு ரூபா 748,000 தொடக்கம் ரூபா 1,156,000 வரையான இடைவெளியில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவதற்கு இந்த சுற்றுநிருபத்தின் பிரகாரம் இடமளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நவீன தொழில்நுட்ப அளத்தல் உபகரணங்களை ஈடுபடுத்தி நில அளவையாளர்கள்

அதிகமான காணிக் கூறுகளின் அளவை குறுகிய காலத்தில் அளக்கப்பட்டிருந்த போதிலும் இந்த அளவிடப்பட்ட காணிக்கூறுகளுக்காக உரித்துறுதிச் சான்றிதழ் விநியோகிப்பதற்கு அதில் 46 சதவீதமான காணிகள் மாத்திரமே அளக்கப்பட்டிருந்தது. அதாவது 2011 திசெம்பர் வரையிலும் கிடைத்த காணிக்கூறுகள் 448,521 இலிருந்து உரித்துறுதிச் சான்றிதழ் 208,883 காணிக் கூறுகள் மத்திரமே பதிவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் இவ்ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டம் உரித்துறுதிச் சான்றிதழ் விநியோகிக்கும் ஒட்டுமொத்த செயலாற்றலுக்கும் நேரடியாகத் தாக்கமளிக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) ஊக்குவிப்புக் கொடுப்பனவு சுற்றுநிருபத்தின் பிரகாரம் அளக்கப்படுகின்ற காணிக் கூறுகளின் எண்ணிக்கையினை மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்ததுடன் ஒவ்வொரு காணிக்கூறுகளினதும் சதுரப்பரப்பளவு கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அளவிடப்படுகின்ற சதுரப் பரப்பளவு கூடியதாக இருந்த போதிலும் கூறுகளின் எண்ணிக்கை குறைவான சியம்பலாண்டுவ போன்ற பிரதேசங்களில் நில அளவையாளர்களுக்கு குறைந்த ஊக்குவிப்புப் படியும் ஹெக்டேயர் எண்ணிக்கை குறைவாக இருந்த போதிலும் கூறுகளின் எண்ணிக்கை அதிகமாகவுள்ள மொரட்டுவ போன்ற பிரதேசங்களில் அளவிட்ட உத்தியோகத்தர்களுக்கு அதிக ஊக்குவிப்புப் படியும் செலுத்தப்பட்டிருந்தன. ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தும் போது அளக்கப்பட்ட கூறுகளின் எண்ணிக்கை மற்றும் உரிய காணியின் சதுர அளவுகள் கவனத்திற் கொள்ளப்படாமையினால் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தும் போது பிரதேச ரீதியாக பாரிய வேறுபாடுகள் காணப்பட்டன.

(ஈ) பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துகின்ற நில அளவையாளர் திணைக்களம், காணி உரிமை நிர்ணயத் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்காக உரித்துறுதிச் சான்றிதழ் தயாரிக்கப்பட்டதன் அடிப்படையில் செலுத்தப்பட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவின் பெறுமதி நான்கு வருடங்களுக்காக அண்ணளவாக ரூபா 394,004,777 ஆக இருந்தது. மேலும் 2011 ஆம் ஆண்டிற்காகச் செலுத்தவேண்டிய முழுமையான ஊக்குவிப்புக் கொடுப்பனவின் பெறுமதி மேற்கூறப்பட்ட பெறுமதியில் கொண்டுவரப்படாதிருந்ததுடன் அந்தப் பெறுமதி கவனத்திற்கொள்ளப்படாதிருந்த போதிலும் ஒரு உரித்துறுதிச் சான்றிதழுக்காக செலவிடப்பட்ட வருடாந்த சராசரி ஊக்குவிப்புக் கிரயம் ரூபா 8,059 ஆகும்.

(உ) செலுத்தப்பட்ட மொத்த ஊக்குவிப்புக் கொடுப்பனவில் நில அளவையாளர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் செலவிடப்பட்ட மொத்த

ஊக்குவிப்புக் கிரயம் 60 சதவீதமாக இருந்தது. நில அளவையாளர் திணைக்களத்தின் அளவை உத்தியோகத்தர்களுக்கு மேலே காண்பிக்கப்பட்ட விபரங்களின் கீழ் அளக்கப்படுகின்ற காணிக் கூறுகளின் அளவுகளை அடிப்படையாகக் கொண்டே ஊக்குவிப்புக் கொப்புனவு செலுத்தப்பட்டிருந்த போதிலும் காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு தயாரிக்கப்பட்ட கோவைகளின் பிரகாரம் ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. மேலும் காணிப்பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு தயாரிக்கப்பட்ட சான்றிதழ்களின் அளவுகளை அடிப்படையாகக் கொண்டு ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டம் சமத்துவத்தைப் பேணும் அடிப்படையிலும் சகல ஊழியர் குழுக்களுக்கும் ஊக்குவிப்புக்களைப் பெறக்கூடிய வகையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் மொரட்டுவ பிரதேச செயலாளர் பிரிவில் கட்டுபெத்த கிராம சேவகர் பிரிவில் 25 காணி உரிமையாளர்களின் உரித்தை 1998 இன் 21 ஆம் இலக்க உரிமைகளைப் பதிவு செய்யும் அதிகாரச்சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய 1607/17 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இந்த பிரதேசத்திற்குரிய அரசாங்கத்திற்குச் சொந்தமான 30 நுழைவு வழிகள் அந்த அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அந்த 30 நுழைவு வீதிகளுக்கும் உரிய காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தினால் கோவைகள் தயாரிக்கப்படவோ அல்லது பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் சான்றிதழ் விநியோகங்களோ மேற்கொள்ளப்படாதிருந்த போதிலும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கும் போது அரசாங்கக் காணி, நுழைவு வீதி போன்றவை ஒவ்வொரு பிரிவாகக் கருதி ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

**தாற்பரியங்கள்**

(i) உரித்துறுதிச் சான்றிதழ் விநியோகிப்பதற்காக பிரதானமாக பங்களிக்கின்ற நில அளவைத் திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் காணி உரிமை நிர்ணயத் திணைக்களங்களுக்காக அமுல்படுத்துப்படுகின்ற ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டம் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதி இலக்கை அடைந்து கொள்ளும் வகையில் அமுல்படுத்தப்படாமையினால் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திறன் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ii) ஊழியர் குழுக்களுக்கிடையே ஊக்குவிப்புக் கொடுப்பனவு உழைத்தல்களில் பாரியளவான அசாதாரண நிலைமை காணப்பட்டமை.

(iii) நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல் முன்னேற்றத்திற்கு தாக்கமளிக்காமல் இருந்தும் ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்காக அதிகரித்த கிரயமொன்றைச் செய்ய வேண்டியிருந்தமை.

**சிபார்சுகள்**

(i) அளவை நடவடிக்கைகளின் போது ஈடுபடுத்தப்பட்ட நவீன உபகரணங்களைக் கவனத்திற்கு எடுத்து நிலஅளவைத் திணைக்களத்திற்குரிய ஆகக் குறைந்த மாதாந்த இலக்கு கூறுகளின் அளவை அதிகரிக்க வேண்டும்.

(ii) அளக்கப்பட்ட கூறுகளின் எண்ணிக்கையைப் போலவே காணிக்கூறுகளின் சதுரப்பரப்பையும் கவனத்திற்கொள்ளல்.

(iii) ஆகக் குறைந்த கூறுகளின் அளவினை தீர்மானிக்கும் போது உரிய பிரதேசம் தொடர்பாக கவனத்திற் கொள்ளல்.

(iv) நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்குகள் மற்றும் செயல்முன்னேற்றங்களை காலரீதியாக மதிப்பீட்டிற்கு உட்படுத்துதல்.

**நிறுவனத்தின் கருத்துரைகள்**

**தொடர்பு 3.2 (அ) பந்தி**

பிம்சவிய அளவைகளுக்காக அரசாங்கத்தின் நில அளவையாளர்களின் மாதாந்த இலக்கு 30 கூறுகள் தொடக்கம் 40 கூறுகள் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே ஏனைய அளவைகளை விட பிம்சவிய அளவைகளுக்காக மேலதிக காலத்தினைச் செலவிட வேண்டியிருந்ததுடன் மலைகளால் சூழப்பட்ட பிரதேசங்களில் காணிகளின் எல்லைகளை அளக்கும் போது ஜீபீஎஸ்(GPS) தொழில்நுட்பம் ஈடுபடுத்தப்பட முடியாதிருந்தமையும் இனங்காணப்பட்டிருந்தது.

**தொடர்பு 3.2(ஆ) பந்தி**

‘‘மூன்றாம் தரப்பினரால் காணி உரித்து தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானம் (பிரதேச செயலாளர், நீதிமன்றம்) விகாரை தேவாலயங்களின் காணி, உரித்தை உறுதிப்படுத்த முடியாத காணி, உரித்து சமர்ப்பிக்கப்படாத காணிகள், காணி வரலாற்றுப்

பட்டோலைகளில் பிரச்சினைகளுக்குரிய காணிகள் மற்றும் உரிமையாளர் வெளிநாடு சென்றமை போன்ற காரணங்களினால் அளக்கப்படுகின்ற சகல காணிகளுக்காகவும் முதல் சந்தர்ப்பத்திலேயே சான்றிதழ் விநியோகிக்க முடியாதிருந்தது. காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சகல தீர்மானங்களுக்காகவும் பொதுவாக உரிமை பதிவு செய்யப்பட்டிருந்தது. ஊக்குவிப்புப் பணம் செலுத்தம் போது பதிவு செய்யப்பட்ட உரித்துறுதிச் சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தால் நில அளவைத் திணைக்களத்தினால் அளக்கப்படுகின்ற சகல காணிக் கூறுகளுக்காகவும் அந்தத் திணைக்களத்திற்கு ஊக்குவிப்புப் பணம் செலுத்த வேண்டியதில்லை.''

**தொடர்பு 3.2(இ) பந்தி**

''மாநகர சபை மற்றும் நகரசபை பிரதேசங்களில் சிறிய காணி கூறுகளையுடைய பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய கூறுகளாக்கப்பட்ட வரைபடப் பிரதேசங்களில் நில அளவையாளர்களுக்கு ஊக்குவிப்புடன் கூடிய சராசரி மாதாந்த வேலை செயல்முன்னேற்றம் 60 - 80 கூறுகளுக்கிடையே மாத்திரம் இருந்தது. சமர்ப்பிக்கப்பட்ட தெரிவுப் பரிசோதனைக்காக மொரட்டுவை மாநகர சபை பிரதேசம் தெரிவு செய்யப்பட்டமையினால் நாட்டின் ஏனைய பகுதிகளின் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு பல்வேறு பிரதேசங்களுக்கும் ஈடுபடுத்துவதனூடாக ஆய்வினைச் செய்து அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்கள் வித்தியாசப்பட்டிருந்தது. அவ்வாறே அளக்கப்படுகின்ற காணிக்கூறுகளின் எண்ணிக்கை மற்றும் சதுரப்பரப்பளவும் கவனத்திற்கு கொள்ளப்பட்டு ஊக்குவிப்புக் கொடுப்பனவைச் செலுத்துவதற்கு 2013 ஆம் ஆண்டின் போது உத்தேசிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பிரதேச ரீதியில் ஏற்படக் கூடிய முரண்பாடுகள் நீக்கப்படும்.''

**தொடர்பு 3.2 (உ) பந்தி**


''அரசாங்கக் காணி மற்றும் நுழைவுப் பாதைகளுக்காக உரித்துறுதிச் சான்றிதழ் விநியோகிக்கப்படாதிருந்த போதிலும் அவ்வாறான காணிகளில் உள்ள அரசாங்கத்தின் உரித்து பதிவு செய்யப்படுகின்றது. இதற்கு முன்னர் அவ்வாறான ஒரு காணிக் கூறிற்காக ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் அவ்வாறான 20 காணிக் கூறுகளுக்கு ஒரு காணிக் கூறாகக் கருதி ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவதற்காக இதுவரை பின்பற்றப்பட்ட முறையில் காணப்பட்ட இனங்காணப்பட்ட நலிவுகளை நீக்குவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ஊக்குவிப்புக் கொடுப்பனவு புதிய திட்டமொன்று முன்மொழியப்பட்டிருந்ததுடன் அது நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றலை அதிகரிப்பதற்கும் காரணமாக இருக்கும்.

### 3.3 பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றம்

### 3.3.1 பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஒவ்வொரு காலப்பகுதியிலும் இலக்கிடப்பட்ட மற்றும் அடையப்பட்ட செயல்முன்னேற்றம் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள்

அளக்கப்பட்ட காணிக்கூறுகளின் எண்ணிக்கை, வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட எண்ணிக்கை மற்றும் பதிவுசெய்யப்பட்ட கூறுகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் பின்வரும் வரைபடம் மூலம் காண்பிக்கப்படுகின்றது.

கூறுகளின் எண்ணிக்கை




வரைபடக் குறிப்பு :- பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றம்

மூலம் :- காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் பிம்சவிய இணைப்புப் பணியகம்

மேற்கூறப்பட்ட அட்டவணையின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2007 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை அளக்கப்பட்ட காணிக்கூறுகளின் எண்ணிக்கையை ஒப்பீடு செய்த போது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட காணிக்கூறுகளின் எண்ணிக்கைகளுக்கிடையே பாரியளவிலான இடைவெளி அவதானிக்கப்பட்டது. இது இந்த அறிக்கையின் 3.2 ஆம் இலக்க பந்தியின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களின் பிரகாரம் அளக்கும் நடவடிக்கைகள் வேகமாக அதிகரித்திருந்தமையில் ஏற்பட்ட இடைவெளியாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

இருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது இந்த இடைவெளி குறைவடைந்திருந்தது. அதாவது சான்றிதழ்களை வர்த்தமானியில் பிரசுரித்தல் மற்றும் பதிவு செய்தல் செயற்பாடுகளின் செயற்திறன் தன்மையைக் கவனத்தில் கொள்ளும் போது அளக்கப்படுகின்ற காணிக் கூறுகளின் எண்ணிக்கை அதிகரிக்காமை ஒட்டுமொத்த நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றத்திற்கு தாக்கமளிக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பட்டோலையில் காணப்பட்ட காணிக்கூறுகளின் அளவு மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட உரித்துறுதிச் சான்றிதழ்கள் அளவு 2009 ஆம் ஆண்டு தொடக்கம் அதிகரித்திருந்த போதிலும் அவ்வாறு முன்னைய ஆண்டுகளில் செயற்பாடுகள் முடிவடையாத உரித்துறுதிச் சான்றிதழ்களின் வேலைகள் பின்னர் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையினால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.3.2 பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கும் அடையப்பெற்ற செயல்முன்னேற்றமும்

2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையில் செயற்திட்டத்திற்குப் பங்களிக்கின்ற நிறுவனத்தின் எதிர்பார்க்கப்பட்ட விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2008 | | | 2009 | | | 2010 | | | 2011 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இலக்கு | செயல் முன்னேற்றம் | சதவீதம் | இலக்கு | செயல் முன்னேற்றம் | சதவீதம் | இலக்கு | செயல் முன்னேற்றம் | சதவீதம் | இலக்கு | செயல் முன்னேற்றம் | சதவீதம் |
| | கூறுகளின் எண்ணிக்கை | கூறுகளின் எண்ணிக்கை | % | கூறுகளின் எண்ணிக்கை | கூறுகளின் எண்ணிக்கை | % | கூறுகளின் எண்ணிக்கை | கூறுகளின் எண்ணிக்கை | % | கூறுகளின் எண்ணிக்கை | கூறுகளின் எண்ணிக்கை | % |
| நில அளவையாளர் திணைக்களம் | 118,200 | 40,194 | 34 | 132,000 | 103,839 | 78 | 130,000 | 83,002 | 64 | 265,680 | 83,190 | 31 |
| காணி உரிமை நிர்ணயத் திணைக்களம் | 106,380 | 15,701 | 15 | 75,000 | 21,693 | 29 | 100,000 | 72,946 | 73 | 212,544 | 79,678 | 37 |
| பதிவாளர் நாயகம் திணைக்களம் | 106,380 | 3,450 | 3 | 75,000 | 5,242 | 7 | 100,000 | 14,501 | 14 | 212,544 | 83,190 | 39 |

பிரதேச அலுவலக மட்டத்தில் எடுக்கப்பட்ட இலக்கிடப்பட்ட மட்டத்தினைவிட அடையப்பட்ட செயல்முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

பலாங்கொடை, திவுலப்பிட்டிய மற்றும் தம்முத்தேகம போன்ற பிரதேச அலுவலகங்களின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்பினைச் செய்யும் போது அந்த அலுவலகங்கள் 2002 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2012 வரை நீண்ட காலமாக ஒரு பிரிவில் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளை அமுல்படுத்தியிருந்ததன் மூலம் அதன் செயற்திறன் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

இது தொடர்பாக கருத்திற் கொள்ளுமிடத்து 2010 ஒக்தோபர் 14 ஆந் திகதிய 5/1/1/1 ஆம் இலக்க காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் கடிதத்தில் உரிமை தீர்த்தல் ஆணையாளர் மற்றும் அளவையாளர் என்பவர்களுக்கு உடனடியாக அந்த வேலைப்பகுதிகளை பூர்த்தி செய்ய வேண்டியமை அத்தியவசியமானதாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறே பலாங்கொடை, ரிதீகம, தலாவ, மொரட்டுவை, ஹோமாகம, தம்புத்தேகம, திஸ்ஸமஹாராம, லுணுகம்வெஹெர மற்றும் மெதிரிகிரிய போன்ற பிரதேச அலுவலகங்களில் 95 சதவீதம் மாத்திரம் அளவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 2011 திசெம்பர் 07 ஆந் திகதி நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தின் அறிக்கையின் பிரகாரம் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் வேலைச் செயற்பாடுகள் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறிருந்த போதும் 2012 இன் இறுதிக் காலாண்டு வரையிலும் இந்த அலுவலகங்கள் மூடப்பட்டிருக்கவில்லை.

### 3.3.3 திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் 2007 - 2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட வேண்டிய பிரதேசங்கள் காண்பிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களை உள்ளவாறாக அளக்கப்பட்ட பிரதேசங்களுடன் ஒப்பீடு செய்த போது ஒவ்வொரு வருடத்தின் போதும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட பிரதேசங்களுக்குப் பதிலாக வேறு பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்தன.

### 3.3.4 நில அளவையாளர் திணைக்களத்தின் மூலம் அளக்கப்பட்ட காணிக் கூறுகளின் எண்ணிக்கை தொடர்பான அவதானிப்புக்கள்

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்காகத் தயாரிக்கப்பட்ட 2007-2021 ஆம் ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் நில அளவை உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட்ட செயற்பொறுப்புக்களின் பிரகாரம் மாதம் ஒன்றில் நிலஅளவை உத்தியோகத்தர் ஒருவரினால் 50 அளவைகளின் எண்ணிக்கை பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனக் காண்பிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் கடந்த 5 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அளவைச் செயற்பாடுகள் தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதன் பிரகாரம் 03 வருடங்களுக்கு இலக்கிடப்பட்ட எண்ணிக்கையை விட குறைவான அளவைகள் செய்யப்பட்டிருந்ததுடன் 2 வருடங்களில் அதிக அளவைகள் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் போது நிலஅளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் அளவைகள் செய்யப்பட வேண்டிய காணிக் கூறுகளின் எண்ணிக்கை மற்றும் பிம்சவிய நிகழ்ச்சித்திட்ட அலுவலகங்களினால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அளவைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய காணிக் கூறுகளின் எண்ணிக்கை மற்றும் பிம்சவிய நிகழ்ச்சித்திட்ட அலுவலகங்களினால் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அளவைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய எண்ணிக்கைகளுக்கிடையே 13,030 கூறுகளின் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**தாற்பரியங்கள்**

திட்டமிடப்பட்ட இலக்கை அடையாமையினால் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றை அடைய முடியாமை.

**ஆலோசனைகள்**

(i) இலக்கிடப்பட்ட எண்ணிக்கைத் தீர்மானிக்கும் போது நடைமுறைத் தன்மையினை கவனத்திற்கு எடுப்பதன் மூலம் முரண்களைக் குறைப்பதற்காக முயற்சித்தல்

(ii) அடைவதற்கு சாத்தியமற்ற இலக்குகள் தொடர்பாக மீள மீளாய்விற்கு உட்படுத்துதல்.

(iii) ஊக்குவிப்புக் கொடுப்பனவு உழைப்புக்களை கணிப்பீடு செய்யும் போது இலக்கிடப்பட்ட நிலையை அடைவது தொடர்பான மூலங்களைக் கருத்திற் கொள்ளுதல்.

(iv) பிரதேச மட்டத்தில் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு அண்மித்துள்ள பிரதேச அலுவலகங்களின் எண்ணிக்கையினைக் குறைத்து பராமரித்தல்.

**நிறுவனத்தின் கருத்துரைகள்**

**தொடர்பு 3.3.2 பந்தி**

சில பிரதேச அலுவலகங்களை மூடிவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அலுவலகங்களுக்கு அண்மித்த இன்னுமொரு பிரதேச செயலகப் பிரிவுகளில் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டமையினால் அந்தப் பிரிவுகளில் அலுவலக வசதிகளை வழங்கும் வரையில் பழைய அலுவலகத்திலிருந்து புதிய பிரிவுகளின் செயற்பாடுகள் நடாத்தப்பட்டிருந்தது. உத்தேச மாவட்ட அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பிரதேச அலுவலகங்கள் மூடப்பட வேண்டியிருந்தது.

**தொடர்பு 3.3.3 ஆம் பந்தி**

பல்வேறு காரணங்களினால் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட சில பிரிவுகளில் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தாது விடுவதற்கும், நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்படாத சில பிரிவுகளை புதிதாக நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்க்க வேண்டியும் ஏற்பட்டிருந்தது. அது ஒட்டுமொத்த இலக்கைப் பூர்த்தி செய்தலோ அல்லது அமுல்படுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டதற்கான காரணங்களாகவோ இல்லை.

**தொடர்பு 3.3.4 ஆம் பந்தி**

“பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டு வரை ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நில அளவையாளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் நில அளவையாளர் திணைக்களத்தினால் வருடாந்த இலக்கு அந்தந்த வருடங்களின் போது உள்ளவாறாக ஈடுபடுத்தக்கூடிய நிலஅளவையாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டிருந்தது. உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையினால் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாதிருந்தது. ஊக்குவிப்புக் கொடுப்பனவுக்கான அங்கீகாரம் பெறுகின்ற போது ஏற்படுகின்ற தாமதங்கள், பதிவு செய்தலில் அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையாளர்களின் கரிசனை மற்றும் மனப்பாங்கு குறைவடைந்தமை, நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காகச் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தும் போது ஏற்படுகின்ற தாமதங்கள், பொதுமக்களின் ஒத்துழைப்பு குறைவடைந்தமை மற்றும் ஏனைய அளவை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் போன்ற விடயங்கள் செயல்முன்னேற்றம் குறைவடைந்தமைக்கான காரணங்களாக அமைந்தது.”

## 3.4 நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்படு தன்மையும் உரிய நிறுவனங்களுக்கிடையிலான தொடர்பும்

### 3.4.1 நிறுவனங்களுக்கிடையே தொடர்பாடல் திருப்திகரமானதாக இல்லாமை

நில அளவையாளர் திணைக்களத்தினால் கூறிடல் வரைபடங்களுடன் கூடிய மென்பொருள், காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட பின்னர் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அதன் பின்னர் உரித்துறுதிச் சான்றிதழ் வழங்கக்கூடிய தரப்பினர் வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக பிரசுரிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் விநியோகிக்கப்படுகின்ற உரித்துறுதிச் சான்றிதழ் தொடர்பான விபரங்கள் காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்கால திட்டமிடல் நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு பிரதேசத்திற்கும் அண்மித்ததாக எவ்வளவுக் காணிக் கூறுகள் உள்ளது எனவும் அந்தக் காணிக் கூறுகளில் சான்றிதழ் விநியோகிக்கப்பட்ட காணிக் கூறுகள் தவிர எஞ்சிய காணிக் கூறுகளுக்காக உரித்துறுதித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றதா என்ற விபரங்கள் தொடர்பான தகவல்களைப் பேணுவதற்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்தினாலும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**தாற்பரியங்கள்**

மேலே குறிப்பிடப்பட்ட நிலைமையின் கீழ் இந்த நிறுவனங்களை தொடர்புபடுத்தும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் பிம்சவிய அலுவலகத்தினால் நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றம் அல்லது நிலவுகின்ற நிலைமை தொடர்பான தகவல்கள் நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. மேலும் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய ஒட்டுமொத்த செயல்முன்னேற்றம் மற்றும் செலவிடப்பட்ட செலவினங்கள் தொடர்பான விபரங்கள் பேணப்படாமையினால் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளல் வினைத்திறனாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**சிபார்சுகள்**

(i) ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்காக உரிய நிறுவனத் தலைவர்களின் கவனத்தை ஈடுபடுத்தும் வகையில் உரிய பொறுப்புக்களையும் தேவையான ஆலோசனைகளையும் சுற்றுநிருபத்தின் மூலம் அறியத்தருதல்.

(ii) இந்த நிகழ்ச்சித்திட்டம் தேசிய முக்கியத்துவம் மிக்க தேவையாக உள்ளது என உறுதிப்படுத்தும் வகையில் உரிய உத்தியோகத்தரப்பினருக்கு அறிவூட்டுதல்.

(iii) ஒருங்கிணைத்தல் செயற்பாடுகளைக் கட்டியெழுப்புவதற்குள்ள தடைகள் மற்றும் பிணக்குகளை மாற்றியமைக்கும் வகையில் பிம்சவிய அலுவலகத்தினால் அடிக்கடி முன்னிற்கக் கூடிய வகையில் அந்த நிறுவனங்களின் உள்ளகக் கட்டமைப்புக்களை வலுப்படுத்துதல்.

**நிறுவனத்தின் கருத்துரைகள்**

"நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றம், நிவுகின்ற நிலைமை தொடர்பான தகவல்கள், செய்யப்பட்ட செலவினங்கள் தொடர்பான தகவல்கள் அமைச்சிடம் உள்ளது. 2013 ஆம் ஆண்டு தொடக்கம் தயாரிக்கப்பட்ட சான்றிதழ்களை பொதுமக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தினால் செய்யப்படுகின்றமையினால் உரித்துறுதிச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்ட கூறுகள் மற்றும் உரித்துறுதிச் சான்றிதழின் இலக்கம் மற்றும் திகதி தொடர்பான விபரங்கள் காணி உரித்துக்களை தீர்த்து வைத்தல் திணைக்களத்திற்கு பராமரிக்கப்பட முடியும். நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக ஒவ்வொரு திணைக்களத்திலும் உள்ள தரவுகளை சேகரித்து பொதுத் தரவு முறைமையொன்றைப் பேணுவதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது."

### 3.4.2 பிரதேச அலுவலகங்கள் அமைத்தல் தொடர்பான பிணக்குகள்

தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் தனியார் அல்லது அரசாங்கப் பிரிவுகளிற்குச் சொந்தமான வாடகை அடிப்படையில் பெறப்பட்ட இரண்டு கட்டிடங்களிலும் நில அளவையாளர் அலுவலகம் மற்றும் காணி உரிமை நிர்ணயத் திணைக்களம் அலுவலகங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருந்ததுடன் அதற்கு அண்மித்ததாகவுள்ள காணியில் காணிப்பதிவாளர் அலுவலகத்தையும் அதற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன் அனேகமாக இந்த அலுவலகங்கள் ஒன்றுக்கொன்று அண்மையில் அமைந்திராமையால் பிரசேத்தில் காணி உரிமையாளர்கள் தமது

தேவைகளுக்காக ஒவ்வொரு அலுவலகங்களுடனும் தொடர்புகொள்வதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**தாற்பரியங்கள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டதன் பிரகாரம் தற்போது பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற பிரதேசங்களில் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உரிய சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு சாதாரணமாக 02 வருடங்களுக்குக் கிட்டிய காலத்தை எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அளக்கப்பட்ட காணிகளுக்குரிய கூறுகளாக்கப்பட்ட வரைபடம் உரித்துக்கள் தீர்த்தல் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கும் அந்த நில வரைபடங்களுக்கு உரிய விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பட்டோலைகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அவற்றை பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் குறைபாடுகளுடன் உள்ளவைகளை திருப்பி அனுப்பப்படுகின்றமையினால் நிறுவனங்களுக்கிடையே காணப்படுகின்ற துாரங்கள் இக்காலதாமத்திற்கு தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துகின்ற ஒவ்வொரு கட்டத்தின் போதும் தாங்கள் அனுப்பவேண்டியது எந்த அலுவலகத்திற்குரியது என்பது தொடர்பாக பொது மக்களுக்கும் எவ்வித அறிவும் காணப்படவில்லை.

**சிபார்சுகள்**

பொதுமக்களால் முகங்கொடுக்கப்படுகின்ற கஷ்டங்களைக் குறைக்கும் நோக்கத்துடன் உரிய அலுவலகங்களை ஒரே இடத்தில் ஸ்தாபிக்கப்பட வேண்டும். அதில் அங்கவீனங்களுக்கு முன்னுரிமை வசதிகளையுடைய இடங்களைத் தெரிவு செய்தலும் கிரயத்தையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**நிறுவனத்தின் கருத்துரைகள்**

பிரதேச அலுவலகங்களை ஒரே இடத்தில் நடாத்திச் செல்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு கட்டிடத்தை கண்டறிவதிலுள்ள கஷ்டத்தினால் மூன்று திணைக்களங்களையும் ஒரே இடத்தில் அமைத்தல் நடைமுறைக்குச் சாத்தியமற்றிருந்தது. 2013 ஆம் ஆண்டு தொடக்கம் அமுல்படுத்தப்படும் முறைமையின் பிரகாரம் பிரதேச அலுவலகங்களிலிருந்து பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களைப் பெறக்கூடியதாக இருக்கும்.

### 3.4.3 நிறுவனங்களுக்கிடையே தகவல்களை பரிமாற்றுதல்

பிரதேச ரீதியாக அமைக்கப்பட்டுள்ள காணி தீர்த்தல் திணைக்கள அலுவலகங்களினால் தீர்க்கப்பட்ட காணிகளுக்காக 1998 இன் 21 ஆம் இலக்க உரிமைகளைப் பதிவு செய்யும் அதிகாரச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் அனுப்பப்படுகின்ற வர்த்தமானியில் பிரசுரிப்பதற்குரிய பட்டோலைகள் மற்றும் கோவைகள் தலைமை அலுவலகத்தினால் உரிய முறையில் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் வர்த்தமானி அறிவித்தலுக்காக அனுப்பப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் உரித்துறுதிச் சான்றிதழ் விநியோகிப்பதற்காக காணிப்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்படுவதுடன் விநியோகிக்க முடியாத குறைபாடுகளுடன் உள்ள பட்டோலைகளை திரும்பவும் உரிமைகள் தீர்த்தல் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் ஊடாக அனுப்பப்பட்டு அந்த அலுவலகத்திலிருந்து அவற்றை மீள பிரதேச அலுவலகங்களுக்கு வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட திட்ட முறைமைக்காக நீண்ட காலம் கடந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து விநியோகிக்கப்பட்ட சான்றிதழ்களின் விபரம் (இலக்கம் மற்றும் திகதி போன்ற) மீளவும் காணி தீர்த்தல் திணைக்களத்திற்கு அல்லது அதன் பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்கப்படாமையினால் பொது மக்களுடன் தொடர்புபடுகின்ற பிரதேச அலுவலகங்களில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**தாற்பரியங்கள்**

(i) உரிமைகள் தீர்த்தல் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் மூலம் பட்டோலைகள் காணிப் பதிவாளருக்கு அனுப்பப்பட்ட திகதி மற்றும் அதற்குரிய விபரங்கள் பிராந்திய அலுவலகங்களுக்கு தெரியாமையினால் பொதுமக்களுக்குத் தேவையான உரிய ஆலோசனைகளை வழங்க முடியாமை.

(ii) நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற நிறுவனங்களுக்கிடையே காணப்பட்ட உள்ளகக் தொடர்புகள் மந்தகதியில் காணப்பட்டமையினாலும், நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் திட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகளினாலும், வினைத்திறனான செயற்திறன் மற்றும் ஒழுங்கான முறையில் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்படாமை.

(iii) காணிப் பதிவாளர் அலுவலகத்தில் தயாரிக்கப்பட்ட உரித்துறுதிச் சான்றிதழ் தொடர்பாக காணிதீர்த்தல்கள் பிராந்திய அலுவலகங்களுக்கு அறிவிக்கப்படாமையினால் துறையில் சந்திக்கும் பொது மக்களுக்கு அது தொடர்பாக அறிவிக்க முடியாதிருந்தமை.

(iv) பொது மக்களுக்கு வசதியாகவும் ஆழமாகவும் விளங்கக்கூடிய வகையில் பிரதேச அலுவலகங்களிலிருந்து கிடைக்கின்ற சேவைகள் கிடைக்காமையினால் நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றம் குறைவடைந்தமைக்கு தாக்கமளித்திருந்தமை.

**சிபார்சுகள்**

(i) இரண்டு அமைச்சுக்கள் மற்றும் நான்கு திணைக்களங்களின் கீழ் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல் சிறந்த நிலைமையினால் அதன் நிறுவகக் கட்டமைப்பை ஒரு நிறுவனத்தின் கீழ் அல்லது ஒரு செயற்திட்ட அலுவலகத்தின் ஊடாக முறையாகக் கட்டுப்படுத்துதல்.

(ii) பிணக்குகளைத் தீர்ப்பதற்காக சில நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுடன் ஒரு நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பொது மக்களைச் சந்திக்க வைத்தல்.

(iii) அலுவலகங்களுக்கிடையே தொடர்புகளை வலுப்படுத்துதல்

(iv) தேசிய ரீதியாக நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான துரித பிரச்சாரங்களை வழங்க வேண்டியமை.

**நிறுவனத்தின் கருத்துரைகள்**

2013 ஆம் ஆண்டு தொடக்கம் அமுற்படுத்தப்படுகின்ற முறைமையின் பிரகாரம் பிரதேச அலுவலகங்களிலிருந்து பொது மக்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### 3.4.4 நில அளவையாளர் திணைக்களம் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்களித்தமை தொடர்பான அவதானிப்புக்கள்

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பக் கட்டமான காணிகளின் அளவைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் நில அளவையாளர் திணைக்களத்தின் செயற்பொறுப்புக்கள் மிகவும் முக்கியத்துவமுடையதாக இருந்ததுடன் இத் திணைக்களத்தின் பங்குபற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு இருந்தன.

(அ) காணியை அளக்கும் போது எல்லையில் உடன்பாட்டைப் பெறமுடியாமை, உரிமையாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் காணிகளை அளத்தல், உடன்பாடின்றி எல்லையினை அளத்தல் போன்ற அளவைப் பிரச்சினைகளினால் இது வரையிலும் பிணக்குகள் எழுந்திராத காணிகளுக்காக புதிய பிரச்சினைகள் தோன்றிய சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. அதாவது இருந்த காணிகளின் உரித்து இழக்கப்பட்டமை, அயலவர்களுடன் பிணக்குகள் ஏற்பட்டமை, பிணக்குகளின் காரணமாக விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டமை, உரித்தின்றியவருக்கு உரித்துறுதிச் சான்றிதழ் கையளிக்கப்பட்டமை போன்ற சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) உரித்துறுதிச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் நில அளவைத் திணைக்களத்தின் மூலம் திருத்தப்பட்ட வரைபடம், காணித்தீர்த்தல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டமையினால் வழங்கப்பட்ட உரித்துறுதிச் சான்றிதழைத் திருத்துவதற்கு முடியாதிருந்தமையினால் முதல் கட்டத்தின் போதே அது தொடர்பாக கவனத்துடன் செயற்பட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற அளவைச் செயற்பாடுகளின் போது அவர்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக நிலஅளவைத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பெறப்பட்டு மேற்பார்வைக் கட்டணத்திற்காக உரிய அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் மேற்கூறப்பட்ட பந்தியின் கீழ் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் அளவைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற கூறுகளின் எண்ணிக்கையை விட தயாரிக்கப்பட உரித்துறுதிச் சான்றிதழ்களுக்குரிய கூறுகளின் எண்ணிக்கை குறைவானமையால் அது தொடர்பாக கவனத்திற் கொள்ளாது தொடர்ந்தும் அதிகாரமளிக்கப்பட்ட நிலஅளவையாளரின் சேவையும் பெறப்பட்டிருந்தது.

(ஈ) உரித்துறுதிச் சான்றிதழில் காண்பிக்கப்படுகின்ற காணிகளுக்குரிய வரைபடத்தில் அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்படாமையினால் உள்ளூராட்சி நிறுவனங்களினால் அந்த வரைபடங்கள் ஏற்றுக்கொள்ளப்படாமையினால் பொதுமக்களுக்கு இடையூறுகள் ஏற்பட்டமை.

(உ) பிரதேச நில அளவை அலுவலகங்களிலிருந்த கூறுகளாக்கப்பட்ட வரைபடங்களுக்குரிய சான்றிதழ் பிரதிகள் மாத்திரம் அனுப்புதல் அல்லது உரிய காணிகளின் வரைபடம், அமைவிடம் (CAD Plan) இன்றியும் 02 மாதங்களுக்கு அண்மித்த காலதாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட காரணத்தினால் பதிவாளர் நாயகம் அலுவலகங்களில் நில அமைவிட வரைபடங்களை உள்ளடக்கி

உரித்துறுதிச் சான்றிதழ்களை அச்சிடுவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் 09 பிரதேசங்களில் கூறுகளின் எண்ணிக்கை 122 முதல் 1376 வரையிலான வீச்சில் இந்தத் தாமதம் தாக்கமளித்திருந்தது.

**தாற்பரியங்கள்**

(i) மேற்குறிப்பிட்ட கஷ்ட நிலைமைகளில் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பொதுமக்களுக்குள்ள நம்பிக்கை இழக்கப்படுகின்றமை.

(ii) திட்டமிடப்பட்ட இலக்கினை அடைவதற்கு இந்தப் பிரச்சினைகள் இடையூறாக இருந்தமை

(iii) வங்கி நிறுவனம் மற்றும் ஏனைய அரசாங்க அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையே இது தொடர்பாக உடன்பாடொன்று காணப்படாமையினால் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிக்கு இடையூறாக இருந்தமை

(iv) காணி உரிமையாளர்கள் இதுவரையிலும் முகங்கொடுக்காத புதிய பிணக்குகள் தோற்றம் பெற்றமை

**சிபார்சுகள்**

(i) இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் காணி உரிமையாளர்களுக்கு அறிவித்து காணிகைள அளப்பதற்கு அவர்களுடன் தொடர்புபடுவதற்காகவும் அளத்தல்களுக்குரிய உடன்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதலும்.

(ii) உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த ஏற்றுக்கொள்ளல்கள் மற்றும் பிரமாணங்களுக்காகவும் வங்கிபோன்ற ஏனைய நிறுவனங்களின் தேவைகளுக்கு இயலுமான வரை இணங்க நடவடிக்கை எடுத்தல்.

(iii) பிரச்சினைகளைக் குறைக்கும் நோக்கத்தில் உத்தியோகத்தர்கள் தமது தொழில்சார் தத்துவங்களுக்கு இணங்க செயற்படுதல்.

(iv) அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையாளரை சேவையில் ஈடுபடுத்தும் போது பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஒட்டுமொத்த செயல்முன்னேற்றம் தொடர்பான ஆய்வினைச் செய்யவேண்டியிருந்தமை.

(v) ஏனைய நிறுவனங்கள் மற்றும் தரப்பினர்களுக்குச் அனுப்பவேண்டிய வரைபடம் மற்றும் ஏனைய தகவல்களை தாமதமின்றி அனுப்புவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

**நிறுவனத்தின் கருத்துரைகள்**

(அ) காணியினை அமைப்பதற்கு முன்னர் காணி உரிமையாளருக்கு அறிவித்த அளக்கும் போது பொது உடன்பாட்டின் அடிப்படையில் பகுதியின் காணப்படுகின்ற எல்லைகளில் அளவிட்ட போதிலும் வேறுபாடுகள் இருந்தமை ஏற்பட்டிருக்குமாயின் பிரச்சினையான நிலைமை ஏற்படும். மேலும் பழைய நிதிச்சட்ட வரைபடங்களின் பிரகாரம் அரசாங்கத்திற்குரிய காணிக்கூறுகளை ஒதுக்கிக் கூறாக்கப்பட்டிருந்தது. கூறுகளாக்கப்பட்ட வரைபடங்களைத் தயாரிக்கும் போது பழைய நியதிச்சட்ட வரைபடத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணி மேற்பார்வை செய்யப்பட்டு காண்பிக்கப்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது கூறுகளாக்கப்பட்ட பகுதிகளுக்குரியதாகும். அவ்வாறே சில சந்தர்ப்பங்களில் ஒரே உரிமையாளரினால் சில உரித்துரைகளின் மூலம் உரித்தைக் கூறுகின்ற காணிகளுக்காக எல்லையினைத் தனியாக இனங்காண முடியாத சந்தர்ப்பங்களின் போது அவ்வாறான கூறுகள் ஒன்றிணைக்கப்பட்டு அளக்கப்படுகின்றது.

(ஆ) கூறுகளாக்கப்பட்ட வரைபடம் தயாரிக்கப்பட்டதன் பின்னர் திருத்தப்பட்ட அளவிடைகள் உரிமை தீர்த்தல் திணைக்களத்தின் வேண்டுகோளின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே தொழில்நுட்பக் குறைபாடுகள் உறுதிப்படுத்தப்படுமாயின் அவைகள் திருத்தஞ் செய்யப்பட்டு உரிமையாளர் மற்றும் பதிவாளர் நாயகத்திற்கு அறிவித்து அவர்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) பதிவுசெய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட நில அளவையாளர்களைத் தெரிவு செய்தல், வேலைகளைக் கையளித்தல், கொடுப்பனவு செய்தல் என்பன உரிய முறைமையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுதல்.

(ஈ) உரித்துறுதிச் சான்றிதழின் நோக்கம் உரித்துக்களைப் பதிவு செய்வதாகும். அதனால் இந்தச் செயற்பாட்டிற்குரிய ஆரம்பத் தரவுகள் மாத்திரம்

கூறுகளாக்கப்பட்ட வரைபடத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. காணியில் உள்ள அபிவிருத்திகள் கூறுகளாக்கப்பட்ட வரைபடங்களில் உள்ளடக்கப்படாமையினால் பிரச்சினைகள் எழுந்தமைக்காக கிடைக்கப்பெற்ற ஆலோசனைகளைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் அவைகளையும் கூறுகளாக்கப்பட்ட வரைபடத்தில் உள்ளடக்கி திட்டமுறையொன்றைத் தயாரித்தல்.

(உ) ''காணி உரிமை நிர்ணயித்தல் திணைக்களத்தினால் உரித்துறுதிச் சான்றிதழை விநியோகிப்பதற்கு இனங்காணப்பட்ட காணி விபரங்களை வர்த்தமானியின் மூலம் பகிரங்கப்படுத்தியதன் பின்னர் அந்தக் கூறுகளுக்குரிய கூறுகளாக்கப்பட்ட வரைபடத்தில் மூலப் பிரதிகள் உரித்துறுதி பதிவாளருக்கு வழங்கப்பட வேண்டும். எனினும் தாமதத்தைத் தடுப்பதற்காக கூறுகளாக்கப்பட்ட வரைபடத்தின் பிரதியை அனுப்பும் சந்தர்ப்பங்களின் போதும் அந்த வரைபடங்களில் உரித்துறுதிச் சான்றிதழ் வழங்கக் கூடிய வகையில் தீர்மானிக்கப்பட்ட கூறுகளுக்காக அடையாளமிடப்பட்ட கூறுகளாக்கப்பட்ட வரைபடம் தயாரிக்கப்பட்டு உரித்துறுதிப் பதிவாளருக்கு அனுப்பப்படுகின்றது. எவ்வாறாயினும் வர்த்தமானியின் மூலம் இறுதித் தீர்மானம் பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னர் மேலும் தேவையான கூறுகளாக்கப்பட்ட வரைபடமாயின் அவைகள் அவ்வற்றின் பிரகாரம் தயாரிக்கப்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது மாத்திரம் சிறிய தாமதங்கள் ஏற்பட முடியும்.''

### 3.4.5 காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தின் நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்களித்தல் தொடர்பான அவதானிப்புக்கள்

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் அதிகார சக்தி உரித்தாக உள்ள காணி உரிமை நிர்ணயத் திணைக்களம் இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்புபடும் முறை தொடர்பான பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) புலன் விசாரணை நடவடிக்கைகளுக்காக உரிய திட்டமுறைமையொன்று காணப்படாமை**

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரதான செயற்பாடாக வரும் புலன் விசாரணை செயற்பாடுகளுக்காக முறையான திட்டமொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ஆரம்ப சந்தர்ப்பத்தின் போது புலன்விசாரணை உத்தியோகத்தர்கள் புலன்விசாரணை செயற்பாடுகளைச் செய்யும் போது நில அளவையாளர்கள் அளத்தல் செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர். அதன் பின்னர் நில அளவையாளர்களினாலும் புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அளத்தல் செயற்பாடுகளைச் செய்வதற்கான

தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. கடைசியாக கிராம உத்தியோகத்தர்களினால் புலன் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2012 ஆகஸ்ட் வரையிலும் அதற்கான விளக்கமான திட்டமுறையொன்று தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. புலன்விசாரணைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவங்களுக்கிடையே உரிமையாளரின் சரியான பெயர் குறிப்பிடப்படாமை, காணியின் அளவு பிழையாகக் காண்பிக்கப்பட்டமை, காணியின் நுளைவு வீதி போன்ற விபரங்கள் சரியாகக் குறிப்பிடப்படாமை போன்றவைகளாகும். அதன் பிரகாரம் உரித்துறுதிச் சான்றிதழ் வழங்கும் போது ஏற்படுகின்ற தாமதங்களை மாற்றியமைப்பதற்கான முறையான திட்டமுறையில் புலன் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) புலன் விசாரணைச் செயற்பாடுகளின் குறைபாடுகள்**

புலன்விசாரணைச் செயற்பாடுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமையினால் இது வரையிலும் தீர்க்கப்பட்ட உரித்துறுதி காணப்பட்ட காணி உரிமையாளர்களுக்கு பிணக்குகள் ஏற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் மற்றும் 1998 இன் 21 ஆம் இலக்க காணித் தீர்த்தல் அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பட்டோலைகள், காணிப் பதிவாளருக்கு அனுப்பப்பட்டதன் பின்னரான காணி உரிமையாளர்களின் விபரம், காணி அளவினை சரியாகக் குறிப்பிடாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் அந்தப் பட்டோலைகளை மீளத்திருப்பி அனுப்பும் சந்தர்ப்பத்தைப் போன்று புலன் விசாரணை நடவடிக்கைகள் உரிய முறையில் இன்மையினால் அனேகமாக தீர்க்கப்பட்ட காணி உரித்துறுதிகள் காணப்படுகின்ற காணி உரிமையாளர்களுக்கு பிரச்சினைகளுடன் கூடிய நிலைமை ஏற்பட்ட சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழ்வருமாறு இருந்தன.

(i) விநியோகிக்கப்பட்ட உரித்துறுதிச் சான்றிதழை இரத்துச் செய்யும் அதிகாரம் காணி உரிமை நிர்ணய ஆணையாளருக்கு இன்மையினால் சரியான புலன் விசாரணையின்றி உரித்துறுதிச் சான்றிதழ் விநியோகிக்கப்பட்ட பல தரப்பினர்களுக்கு பாரியளவில் பாதகமான நிலை ஏற்பட்டிருந்தது.

(ii) புலன்விசாரணை உத்தியோகத்தரினால் காணி தொடர்பாக பிழையான ஆலோசனைகள் நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை.

(iii) உரிய விடயங்கள் விசாரணையின்றி உரித்துறுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டமையால் நபர்களுக்குரிய பயிர்நிலங்கள், நுழைவு வழிகள் உரித்தற்றமையினால் பொருளாதார மற்றும் சமூக பிணக்குகள் ஏற்பட்டமை.

(iv) விநியோகிக்கப்படுகின்ற உரித்துறுதிச் சான்றிதழின் தகவல்கள் பிழையானமையால் நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பணம் பெறும்போது பிணக்குகள் ஏற்பட்டிருந்தமை.

(v) உரித்துறுதிச் சான்றிதழ் விநியோகிப்பதற்கு முன்னர் காணிப் பதிவாளர் அலுவலகங்களிலிருந்து முன்னர் பதிவு செய்யப்பட்ட விபரற்கள் உரிய பிரகாரம் பரீட்சிக்கப்படாமையினால் தற்போதைய உரிமையாளருக்குரிய காணியின் உரித்து கிடைப்பதற்கு முன்னர் உரிமையாளருக்கு காணியின் உரித்து உரித்துறுதிச் சான்றிதழின் மூலம் வழங்கப்பட்டிருந்தமை.

**தாற்பரியங்கள்**

(i) புலன்விசாரணை நடவடிக்கைகள் தொடர்பாக உரிய முறைமையொன்றும் தொடர்புகளும் காணப்படாமையினால் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியமை.

(ii) ஆரம்ப புலன்விசாரணைச் சந்தர்ப்பங்களின் போது ஏற்படக்கூடிய பிணக்குகளை சரியாக இனங்காணாமையால் பின்னைய காலத்திலும் இந்நிலைமைகள் தோற்றம் பெறக்கூடியதாக இருந்தமை.

(iii) உரிய முறையில் உறுதிப்படுத்தப்படாத தரவுப் பதிவேடு தயாரிக்கப்பட்டமையினால் ஏற்பட்ட பிணக்குகளின் காரணமாக நிகழ்ச்சித்திட்டத்தில் வெற்றிகரமாக தாக்கத்தை ஏற்படுத்தியமை.

**சிபார்சுகள்**

(i) புலன்விசாரணை செயற்பாடுகள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளக் கூடிய தரப்பினரைத் தீர்மானித்து புலன் விசாரணையின் போது உரித்தாக்கிக் கொள்ளுதல்.

(ii) புலன் விசாரணையின் மூலம் செய்யப்படுகின்ற அவதானிப்புக்கள் தொடர்பாக செயற்பட வேண்டிய முறை தொடர்பாக விளக்கமான ஆலோசனைகளை வழங்குதல்.

(iii) நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புபடும் சகல தரப்பினர்களினதும் இணக்கப்பட்டுடன் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பயன்படுத்துதல்.

**நிறுவனத்தின் கருத்துரைகள்**

(அ) ‘‘பல்வேறு முறைகளைக் கண்டறிந்து பின்பற்றியமையினால் அவ்வப்போது நிகழ்ச்சித்திட்டத்தின் அமுல்படுத்தல் திட்டமுறைமை மாற்றப்பட்டிருந்தது. இருந்த போதிலும் சகல முறைமைகளையும் மீளாய்வு செய்து 2013 ஆம் ஆண்டு தொடக்கம் அமுல்படுத்துவதற்கான முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒவ்வொரு காணிக்கூறு தொடர்பாகவும் கிராம உத்தியோகத்தர் ஊடாக பெறப்பட்ட அடிப்படைத் தரவுப் பத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு எஞ்சிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிள்றது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் பிரச்சினைகள் ஏற்படாதிருக்கும்.’’

(ஆ) காணிப்பதிவேடு மற்றும் தகவல்களின் முறையற்ற தன்மையினால் பொதுமக்களினால் வழங்கப்படுகின்ற தகவல்களில் பிரச்சினைகள் காணப்படுகின்றமையினால் காணிகளுக்குரிய சகல பிரச்சினைகளும் வெளிப்படாத சந்தர்ப்பங்கள் உள்ளன.

### 3.4.6 பதிவாளர் நாயகம் திணைக்களம் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்களித்தமை தொடர்பான அவதானிப்புக்கள்

காணி உரிமை நிர்ணயித்தல் திணைக்களத்தினால் உரித்துறுதிச் சான்றிதழ் விநியோகிப்பதற்காக சிபார்சு செய்யப்பட்ட பட்டோலைகளின் பின் உரித்துக்களைப் பதிவுசெய்தல் மற்றும் சான்றிதழ் விநியோகித்தல் தொடர்பான செயற்பாடுகளை நிறைவேற்றுகின்ற பதிவாளர் நாயகம் திணைக்களம் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்களிக்கின்ற முறைகளைப் பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூறுகளாக்கப்பட்ட வரைபடங்களைத் தயாரித்ததன் பின்னர் அந்தப் பிரதேசத்தில் காணிகளுக்காக உரித்துறுதிச் சான்றிதழ் வழங்கப்படாத காணிகளுக்காக உரித்துறுதியை எழுதும் போது அந்த உரித்துறுதி கூறுகளாக்கப்பட்ட

வரைபடத்துடன் தொடர்புபடுத்தப்பட்டு எழுதுவதற்காக உரிய சட்டத்தரணி/ நொத்தாரிசுக்கு அறிவிக்கும் அளவு போதியளவில் இல்லாமை.

(ஆ) கையளிக்கப்பட்ட உரித்துறுதிச் சான்றிதழ் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்களில் இருக்க வேண்டிய சிறந்ததும் கண் கவர் முறையில் இருந்தமையும் (கடதாசி, அச்சிடல் எழுத்து, அளவு) போன்று சான்றிதழ் காலநீடிப்பு இல்லாதிருந்தமை மற்றும் காப்பு உறை அதற்குப் போதியதாக இல்லாமை.

(இ) அனேகமாக இந்த அலுவலகம் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட நகரங்களுக்கண்மையிலுள்ள கட்டிடங்களில் இரண்டாவது/ மூன்றாவது உயர் மாடிகளில் அமைக்கப்பட்டிருந்தமையினால் வயோதிபர்கள் அல்லது அங்கவீனர்களுக்கு இந்த அலுவலகத்திற்கு நுழைவது மிகவும் கஷ்டமானதாகும். மின் பாரந்தூக்கி காணப்படுகின்ற அலுவலகங்களில் இந்தக் கஷ்டங்கள் காணப்படாதிருந்த போதிலும் இந்த வசதிகள் அற்ற ஹோமாகம போன்ற அலுவலகங்களில் இந்த நிலைமை பாரிய பிரச்சினைக்குரியதாக இருந்தது.

(ஈ) தயாரிக்கப்பட்ட உரித்துறுதிச் சான்றிதழ்களின் அதிக அளவு உரிய உரிமையாளர்களினால் பெற்றுக்கொள்ளப்படாமையினால் அவைகள் கையிலுள்ள சான்றிதழாக பேணப்பட்டிருந்ததுடன் அந்தச் சான்றிதழ்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. உரித்துறுதிச் சான்றிதழ் வழங்குவதற்கான அச்சிடல் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் கையளிக்கப்படாத சான்றிதழ்கள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு இருந்தது.

| | **2007** | **2008** | **2009** | **2010** | **2011** | **2012.05.31 வரையும்** |
|---|---|---|---|---|---|---|
| தயாரிக்கப்பட்ட உரித்துறுதிச் சான்றிதழின் அளவு (தனியார்) | 7,532 | 4,853 | 9,569 | 25,864 | 82,838 | 25,053 |
| நபர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட உரித்துறுதிச் சான்றிதழ்களின் அளவு | 5,985 | 3,450 | 5,242 | 14,501 | 25,697 | 11,103 |
| வேறுபாடு (பகிர்ந்தளிக்கப்படாத அளவு) | 1,547 | 1,403 | 4,327 | 11,363 | 57,141 | 13,950 |

(உ) நில அளவையாளர் திணைக்களம் மற்றும் காணி உரிமை நிர்ணயித்தல் திணைக்களம் என்பன பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய செயல்முன்னேற்றம் பிம்சவிய அலுவலக மட்டத்தில் சமர்பிக்கப்பட்டிருந்ததுடன் காணிப் பதிவாளர் அலுவலகம் பிம்சவிய அலுவலக மட்டத்தில் இன்றி தமது காணி பதிவு செய்தல் அலுவலக மட்டத்தில் அறிக்கையிட்டிருந்தமையால் அத் தகவல்களை ஒப்பீடு செய்தல் சிரமமாக இருந்தது.

உதாரணம் :- மொரட்டுவ பிரதேசத்தில் பிம்சவிய அலுவலகத்திற்குரிய உரித்துறுதி சான்றிதழ் பதிவு செய்தல் தெல்கந்த பதிவாளர் அலுவலகத்திலிருந்தமையினால் மொரட்டுவ பிரதேசத்திற்குரிய செயல்முன்னேற்றம் தெல்கந்த அலுவலக மட்டத்திலேயே காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் போது தெல்கந்த அலுவலகத்தில் இரத்மலானை, கெஸ்பேவ போன்ற 06 அலுவலகங்களின் தகவல்களும் ஒரே தடவையில் காண்பிக்கப்படுகின்றமையால் ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

**தாற்பரியங்கள்**

(i) அலுவலகத்தை ஸ்தாபிக்கும் போது பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும் வகையில் ஸ்தாபிக்கப்படாமை.

(ii) தயாரிக்கப்பட்ட உரித்துறுதிச் சான்றிதழ் தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவிக்கப்படாமை.

(iii) அரசாங்க மட்டத்தில் விநியோகிக்கப்படுகின்ற சான்றிதழில் காணப்படக்கூடிய சிறப்பான தன்மையில் உள்ள கவனம் குறைவடைந்தமை.

(iv) தயாரிக்கப்பட்ட உரித்துறுதிச் சான்றிதழ் உரிய உரித்தாளிகளுக்கு வழங்கப்படாமை.

**சிபார்சுகள்**

(i) அலுவலகத்தை ஸ்தாபிக்கும் போது பொதுமக்களின் தேவை தொடர்பாக கவனத்திற் கொள்ளுதல்.

(ii) விநியோகிக்கப்படுகின்ற உரித்துறுதிச் சான்றிதழின் சிறப்புத் தன்மையை அதிகரிப்பதற்கு தொடர்புபடுகின்ற காணியின் அபிவிருத்தித் திட்டம்

போன்ற விடயங்களை உள்ளடக்கி சான்றிதழின் ஏற்றுக்கொள்ளக் கூடிய தன்மையை அதிகரித்தல்.

(iii) தற்போது கையளிக்கப்படாத சான்றிதழ்களை பகிர்ந்தளிப்பதற்கு உரிய வேலைத் திட்டமொன்றை அமுற்படுத்துதல்.

**நிறுவனத்தின் கருத்துரைகள்**

(அ) கூறுகளாக்கப்பட்ட வரைபடங்களைப் பயன்படுத்தி நொத்தாரிஸ் உரித்துறுதி தயாரிப்பதற்கு சட்டத்தரணி மற்றும் நொத்தாரிசுகளுக்கு சுற்றுநிருபத்தின் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தும் அது தொடர்பாக கட்டாயப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் தற்போது காணப்படவில்லை. உரித்துறுதி பதிவு செய்யும் அதிகாரச் சட்டத்தில் திருத்தத்தை இணங்காண்பதற்கான நியமிக்கப்பட்ட குழுவின் போது இது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 1998 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 1050/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட கட்டளையின் பிரகாரம் உரித்துறுதிச்சான்றிதழ் விநியோகிக்ப்படுகின்றது. சான்றிதழின் தரத்தன்மையை அபிவிருத்தி செய்யும் முறையில் புதிய சான்றிதழ் திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்குரிய புதிய கட்டளை வரைபுபடுத்தப்பட்டு சட்ட வரைவு வழங்குவதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

(இ) எதிர்காலத்தில் அரசாங்கத்தின் கட்டிடத்தை தேடிப்பார்ப்பதற்கோ அல்லது நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(ஈ) உரித்துறுதிச் சான்றிதழ் பகிர்ந்தளிப்பதற்கு முடியாமைக்காக பொது மக்கள் அதற்காக கவனம் செலுத்தாதிருந்தமையாகும். 2013 ஆம் ஆண்டு தொடக்கம் உரித்துறுதிச் சான்றிதழ் பகிர்ந்தளித்தல் காணி தீர்த்தல் பிரதேச அலுவலகங்களின் மூலம் அமுல்படுத்தப்படுகின்றது.

## 3.5 பதவியணியினர் முகாமைத்துவம்

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்களிக்கின்ற ஒவ்வொரு நிறுவனத்தினதும் பதவியணியினர், நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்காக பங்களிப்பினை வழங்குகின்ற முறையின் செயற்பாடுகள் எவ்வாறானது தொடர்பான கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) ஒப்பந்த அடிப்படையில் பதவியணியினரைச் சேர்த்தல்**

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக காணி உரிமை நிர்ணயித்தல் திணைக்களமானது காணி தொடர்பான அடிப்படை புலன் விசாரணைகளை நடாத்துதல் மற்றும் உரிய இறுதித் தீர்மானத்தை வர்த்தமானி மூலம் பகிரங்கப்படுத்தி உரித்துறுதிச் சான்றிதழ் வழங்குவதற்காக சரியான நபர்களின் பெயர்களைத் தெரிவு செய்வதே அதன் செயற்பொறுப்பாகும். இதற்காக காணி தொடர்பாக தொழில் அனுபவமுள்ள உத்தியோகத்தர்களைத் தகைமையுடைய நிரந்தர பதவியணியினரைச் சேர்த்து அதன் கோவைகளைப் பெறவேண்டிய போதிலும் காணி உரிமை நிர்ணயித்தல் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட 30 பதவிகளில் 08 மாத்திரம் நிபந்தரமாக நிரப்பப்பட்டிருந்ததுடன் தற்காலிக அடிப்படையில் 24 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்த உத்தியோகத்தர்கள் மிகவும் குறுகிய காலம் அப்பதவியில் சேவையாற்றி அந்தப் பதவியிலிருந்து விலகிச் சென்றமையால் அவர்களுக்குப் பதிலாக மீளவும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

**(ஆ) சட்ட உத்தியோகத்தர்கள் போதியளவில் இல்லாமை**

இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் போது தொடர்ச்சியாக காணி தொடர்பாக எழுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்கும் போது முறையான திட்டமொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டியிருந்துதுடன் அதன் போது சட்ட உத்தியோகத்தர்களின் செயற்பொறுப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 1999 ஆம் ஆண்டு வரையில் காணி உரிமை நிர்ணயித்தல் திணைக்களத்தின் உதவி ஆணையாளர்/ சட்ட உத்தியோகத்தர் பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 07 ஆக இருந்த போதிலும், 2009 ஆம் ஆண்டின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 02 ஆகக் காணப்பட்டது. அதனால் சகல காணிப் பிரச்சினைகள் தொடர்பாக இறுதித் தீர்வினை வழங்கி இந்த சேவையின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளும் போது பிரச்சினைகள் உருவாகியிருந்தது.

**தாற்பரியங்கள்**

நிகழ்ச்சித்திட்டத்திற்கு அத்தியாவசிய மூலமாக காணப்படுகின்ற மனிதவளம் உரிய முறையில் ஆட்சேர்க்கப்படாமல் பதிற்கடமை மற்றும் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றியமை நிகழ்ச்சித்திட்டத்தின் செயல்முன்னேற்றம் மந்தகதியில் இருந்தமைக்கு தாக்கமளித்திருந்தது.

**சிபார்சுகள்**

(i) மனித வளங்களைச் சேர்த்தல், பயிற்சியளித்தல் மற்றும் பதவியுயர்த்துதல் முறைமைகளை அபிவிருத்தி செய்தல். இதன் போது பொறுப்புக்களைக் கையளிப்பதற்கும் அவற்றை நிறைவேற்றுவதற்கும் தொடர்புபடும் வகையில் விஷேட பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தரை நியமித்தல்.

(ii) ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறை அமுல்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டத்தின் போது கட்டாயமாக அத்தியவசியமான ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் செயலாற்றல் மட்டத்தின் மதிப்பீட்டில் விரிவான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.

**நிறுவனத்தின் கருத்துரைகள்**

(அ) ‘‘காணி உரிமை நிர்ணயித்தல் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவிக்காக (பிரதி/ உதவி ஆணையாளர்) முழுநேர உத்தியோகத்தர்கள் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சிலிருந்து வழங்கப்படாமையினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அந்தப் பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களைச் சேர்ப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தர்கள் இலங்கை நிருவாக சேவையில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களாக இருந்ததுடன் காணி கடமைகள் தொடர்பாக மிகவும் அறிவுள்ள மற்றும் அனுபவமுள்ள உத்தியோகத்தர்களாவர். எவ்வாறாயினும் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்காக முழுநேர உத்தியோகத்தர்கள் வழங்கப்படுமாயின் ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதை நிறுத்தக்கூடியதாக இருக்கும்.’’

(ஆ) ‘‘எதிர்காலத் தேவைகளை கருத்தில் கொண்டதன் பின்னர் சட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.’’

## 3.6 தரவு முறைமையினை ஸ்தாபித்தல் மற்றும் அதன் பயன்பாடு

### 3.6.1. தகவல் மையப்படுத்தல் முறைமையை ஸ்தாபித்தல்

தற்போதைய காணி தொடர்பான தகவல்களை சேகரித்தல் சில நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் காணி தொடர்பாக தகவல்களை நேரடியாகவும் இலகுவாகவும் பெற்றுக்கொள்ளும் முறைமையொன்று இது வரை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தத் தேவைக்காக காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் ஊடகத் தகவல் முறையை ஸ்தாபிப்பதற்குத் தேவையான காணித் தகவல் நிலையமொன்றை ஏற்படுத்தி (e-Landhub) அதற்காக உரிய வசதிகளையுடைய நிறுவனங்களிலிருந்து கூறுவிலைகள் சமர்ப்பிக்குமாறு அறிவித்து 2011 திசெம்பர் 02 ஆந் திகதி செய்திப் பத்திரிகையில் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தனியார் நிறுவனமொன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 5,544,000 தொகையான கேள்வி மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2012 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் அது தொடர்பாக எஞ்சிய செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.6.2 தரவு முறைமைகளின் ஊடாக உரிய நிறுவனங்களுக்கிடையே இணைப்புக்களை ஏற்படுத்துதல்

2002 இன் 17 ஆம் இலக்க அளவைகள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அளவையாளரினால் கூறுகளாக்கப்பட்ட வரைபடம் தொடர்பாக தரவு வங்கியொன்று பேணப்பட வேண்டியிருந்தமையும் சகல கூறுகளாக்கப்பட்ட வரைபடங்களையும் ஒன்றிணைத்து தொடர்புபடுத்தி ஒரே முறைமையின் பிரகாரம் தயாரித்து அதன் மூலம் காணி தொடர்பாக நாளது வரையாக்கப்பட்ட தகவல்களை பொதுமக்களுக்கு பெற்றுக்கொள்வதற்கு வசதிகள் வழங்க வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை பின்வரும் விடயங்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது.

(அ) 2007 ஆம் ஆண்டின் போது காணித்தகவல் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் வெளிக்கள உத்தியோகத்தர்களினால் தகவல்களைச் சேகரித்தல் மற்றும் அறிக்கையிடலின் குறைபாட்டினால் தரவுகளைக் களஞ்சியப்படுத்தும் போது பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தது. அதனால் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 459,268 காணிக் கூறுகளை தரவு முறைமைகளில் உள்ளடக்குவதற்காக தொடர்பு படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த தரவு முறைமையில் 368,896 கூறுகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) காணித் தகவல் பிரிவிற்காக இருக்கின்ற பதவியணியினர் போதியளவில் இல்லாமை.

(இ) பூர்த்தி செய்யப்பட்ட கூறுகளாக்கப்பட்ட வரைபடம் தொடர்பான விபரங்கள் நில அளவைத் திணைக்களத்திடம் பேணப்படவேண்டிய போதிலும் அவைகள் ஏனைய நிறுவனங்களின் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய வகையில் பரிமாற்றம் செய்யும் முறைமையொன்று கட்டியெழுப்பப்படாமை.

**தாற்பரியங்கள்**

(i) இந்த தரவு முறை உரிய பிரகாரம் ஸ்தாபிக்கப்படாமையினால் தேவையான தரவுகள் நாளதுவரையாகப் பெற்றுக்கொள்ள முடியாமையினால் நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கமான நாளதுவரையான தரவுகள், தேவையான தரப்பினர்களுக்கு பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டமை.

(ii) செயற்திட்டத்தின் தரவு முறைமையினை ஸ்தாபிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு இதற்காகப் பயன்படுத்தப்படாமை.

**சிபார்சுகள்**

(i) காணி உரிமை நிர்ணயத் திணைக்களம், நில அளவைத் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகம் திணைக்களம் தங்களது திணைக்கள மட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட தரவு முறைமைகளுக்குரிய திணைக்களங்களுக்கிடையே தொடர்பினை ஏற்படுத்துதல்.

(ii) வலைப்பின்னல் வசதிகளை பயன்பாட்டிற்கு எடுப்பதன் மூலம் பொதுமக்களுக்கு தமது தேவைகளுக்காக நாளதுவரையாக தகவல்களை பெற்றுக்கொள்ளும் காலம் மற்றும் கிரயங்களைச் சேமித்து சிறப்பான முறையில் காணி முகாமைத்துவத்திற்குத் தேவையான வரைபடங்களைத் தயாரித்தல்.

**நிறுவனத்தின் கருத்துரைகள்**

**தொடர்பு 3.6.1 ஆம் பந்தி**

காணித் தகவல் நிலையத்தை (e-land hub) செயற்படுத்துகையில் நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய தகவல்கள் கணனிமயப்படுத்தப்பட்டிருந்ததுடன்

ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்ட முறைமையின் பிரகாரம் அந்தத் தகவல்களை உரிய நிறுவனங்களுக்கிடையே பரிமாற்றக் கூடியதாக இருக்கும்.

**தொடர்பு 3.6.2 பந்தி**

நில அளவையாளர்கள் நவீன தொழில்நுட்ப உபகரணங்களின் மூலம் காணித் தகவல்களைச் சேகரித்து தரவு முறைமைகளில் உள்ளடக்குதல் அளவைப் பிரமாணங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுவதுடன் களத் தரவுகளை சேகரித்தல் சுயமாக மேற்கொள்ளப்படாமையினால் சிறிய குறைபாட்டு நிலை ஏற்படக்கூடும். இந்தக் குறைபாட்டு நிலைமையினை சரிசெய்வதற்காக கருத்திற்கொள்ளக் கூடிய காலம் எடுப்பதுடன் 2011/2012 ஆம் ஆண்டுகளின் போது தயாரிக்கப்பட்ட முறைமைகளின் பிரகாரம் குறைபாட்டு நிலைமைகள் இழிவுபடுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே நில அளவையாளர் திணைக்களம் தமது தகவல்களை உள்ளடக்கி தரவு முறைமையைத் தயாரித்த போதிலும் ஏனைய நிறுவகங்களுடன் தொடர்பு கொள்வதற்கு பொருத்தமான மென்பொருள் மற்றும் தொழில்நுட்ப வசதிகள் போதியளவில் கிடைத்திருக்காததுடன் காணித் தகவல் நிலையத்தை அமுல்படுத்தும் போது இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

வழங்குனரான இலங்கை நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் காணித் தகவல் முறைமையை ஸ்தாபிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

காணி தகவல் முறைமைப் பிரிவில் பதவியணியினரின் தேவைக்காக தொழில்நுட்ப பயிலுனர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்குப் பயிற்சியளிக்கும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

‘‘காணி தகவல் முறைமைப் பிரிவிற்கு பிரதேசங்களிலிருந்து கிடைக்கின்ற தரவுகளை பொருத்தமான பிரகாரம் தயாரிப்பதற்கு குறித்த சில காலப்பகுதி எடுக்கப்பட்டது. 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நில வரைபடங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரவுகள் பாரியளவில் ஒரே தடவையில் காணித் தகவல் முறைமைப் பிரிவிற்கு அனுப்பப்பட்டமையின் காரணமாக 90,302 கூறுகளின் தரவு முறைமையில் உள்ளடக்குவதற்கு எஞ்சியிருந்தது. தற்போது அந்தத் தகவல்கள் தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 3.7 பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு உரித்தாகின்ற சட்டரீதியான ஏற்பாடுகள் தொடர்பான அவதானிப்புக்கள்

### 3.7.1 1998 இன் 21 ஆம் இலக்க உரிமைகளைப் பதிவுசெய்யும் அதிகாரச்சட்டம்

(அ) காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் இந்த அதிகாரச்சட்டத்தில் பல்வேறு குறைபாடுகள் இனங்காணப்பட்டிருந்தது. அந்த இனங்காணப்பட்ட குறைபாடுகள் பின்வருமாறு இருந்தது.

(i) அதிகாரச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் மூலம் அதிகாரச்சட்டத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றும் வகையில் உரித்துக்களை தீர்த்தல் ஆணையாளர் பிரதி மற்றும் உதவி ஆணையாளர் நியமிக்கப்பட வேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களின் பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகள் அதிகாரச்சட்டத்தில் விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் மூலம் உரித்துறுதி தொடர்பாக பதிவாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவர்களின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் அதிகாரச்சட்டத்தில் விளக்கப்படவோ அல்லது விளங்கப்படவோ இல்லை.

(iii) உரித்துறுதி பதிவு செய்தல் அதிகாரச் சட்டத்தை அமுல்படுத்தும் போது அதன் பிரிவுகள் நொத்தாரிஸ் அதிகாரச்சட்டம் மற்றும் மோசடிகளைத் தடுக்கும் கட்டளைச் சட்டம் மற்றும் பிணக்குகள் ஏற்படும் பகுதிகளைக் குறைப்பதற்காக அந்த அதிகாரச்சட்டங்களில் ஒவ்வொரு பிரிவுகளினதும் உரித்துக்களைப் பதிவு செய்யும் அதிகாரச்சட்டத்திற்குரியதல்லாதது எனக் காண்பிக்கப்படாமை.

(ஆ) தெரிவுப் பரிசோதனைக்கு உள்ளடக்கப்பட்ட ஹோமகம பிரதேசத்தின் 2011 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட ''அலுவலக மட்டத்தில் காணிப் பிணக்குகளை வகைப்படுத்தும் பதிவேட்டின்'' பிரகாரம் இனங்காணப்பட்ட 10 பிணக்குகளில் 03 பிணக்குகள் பிரதானமாக அதிகாரச்சட்டத்தின் மூலம் தீர்க்கப்படக்கூடிய பிணக்குகளுக்குரிய விடயங்களாக இருந்தன.

(இ) மேலே காண்பிக்கப்பட்ட குறைபாடுகளைத் திருத்தி அதிகாரச் சட்டத்தைத் திருத்துவதற்காக 2003 ஆம் ஆண்டு தொடக்கம் சில நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2012 ஆகஸ்ட் 07 ஆந் திகதி வரை அதிகாரச் சட்டத்தைத் திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.7.2 அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவில் கூறுகளாக்கப்பட்ட வரைபடங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் கிடைத்ததன் பின்னர் காணி உரிமை நிர்ணயித்தல் ஆணையாளரினால் அந்த அறிவித்தலில் குறிப்பாகக் குறிப்பிடப்பட்ட காணிக் கூறிற்கு உரித்துடையவர்களினால் குறிப்பிட்ட காலத்தினால் அவர்களின் உரித்துக்களை தமக்கு சமர்ப்பிக்கும் படி கேட்கப்பட்ட அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரித்து பெறவேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

அவ்வாறே 1998 ஒக்தோபர் 21 ஆந் திகதிய 1050/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் (1998 இன் 21 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தின் கட்டளையின் பெயரிலான) 4 ஆம் இலக்கத்தின் கீழ் மேலும் பகிரங்கப்படுத்துவதற்காக அந்த அறிவித்தல் விபரங்களை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளிலும், வானொலி, தொலைக்காட்சி ஊடகங்களின் மூலம் ஏதாவது விளம்பரத்தினைச் செய்ய வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் இதன் 12 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் அரசாங்கத்தின் வர்த்தமானி அறிவித்தலில் மாத்திரம் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் பொதுவாக வர்த்தமானி அறிவித்தல் பொதுமக்களுக்கு பரிசீலிக்கக் கூடிய ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

இவ்வாறு உரிய விளம்பரங்கள் ஹோமாகம பிரதேசத்தின் காணி உரிமையாளர்களுக்கு கிடைக்காமையின் அடிப்படையில் உரிமைகளைப் பிரசுரித்தல் சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டமையால் பிழையான நபர்களுக்கு உரித்துறுதிச் சான்றிதழ் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பகிரங்கப்படுத்த வசதியளிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) அதிகாரச் சட்டத்தின் 14 ஆவது பிரிவின் கீழ் உரித்துறுதிச் சான்றிதழை வழங்குதல் தீர்மானிக்கப்பட்ட தரப்பினர்களின் விபரம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்டதுடன் 14 ஆம் பிரிவின் கீழ் அவ்வாறு வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஏதாவது உரிமையாளரினால் அந்த

பிரசுரித்தலுக்கு எதிராக காணிக்கூறு அமைந்துள்ள பிரதேசத்தின் நீதிமன்ற அதிகாரத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் குறிப்பிட்ட காலத்தில் மேன்முறையீடுகளைக் சமர்ப்பிக்க வேண்டும்.

அதிகாரச் சட்டத்திற்குரிய கட்டளையான 1050/10 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 08 ஆவது விடயங்களின் மூலம் அவ்வாறு முறையீட்டைச் சமர்ப்பிப்பதற்கு 06 மாத காலம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2003 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 1302/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் இது ஒரு மாதத்திற்குக் குறைக்கப்பட்டிருந்தது.

இருந்த போதிலும் வர்த்தமானி அறிவித்தல் அச்சகரினால் அனுப்பப்படுகின்ற திகதியே அதில் குறிப்பிடப்பட்டு பகிரங்கப்படுத்தப்படுகின்றமையினால் அது வரையில் 02 மாதங்களுக்கு அதிகமான காலம் கடக்கின்றமையினால் பொதுமக்களுக்கு முறையீடுகளைச் சமர்ப்பிப்பதற்கு போதியளவான காலம் கிடைக்காதிருந்த சந்தர்ப்பம் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) ஹோமாகம பிரதேசத்திற்கு அண்மித்ததாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசீலனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் பிரதேசத்தில் கூறுகளாக்கப்பட்ட 34 வரைபடங்களுக்குரிய அளக்கப்பட்ட 82,259 காணிக் கூறுகளில் 40 சதவீதம் மாத்திரம் அவதாவது 33,678 காணிக் கூறுகளுக்காக மாத்திரம் உரித்துறுதிச் சான்றிதழ் வழங்குவதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டிற்குரிய அலுவலக மட்டத்தில் ‘‘காணி பிணக்குகளை வகைப்படுத்தும் பதிவேடு’’ இதன் பிரகாரம் எழுந்திருந்த 10 அடிப்படை பிணக்குகளில் பிரதான பிணக்காக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உரிய செயற்பாடுகள் காணப்படாமையினால் எழுந்த பிணக்குகள் என இனங்காணப்பட்டிருந்தது.

**தாற்பரியங்கள்**

(i) அதிகாரச்சட்டத்தில் காணப்படுகின்ற குறைபாடுகள் நாளதுவரையாக சரிசெய்யப்படாமையினால் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கினை அடைந்துகொள்வதன் வினைத்திறன் குறைவடைந்தமை.

(ii) தீர்க்கப்பட்ட உறுதிக்காக மாத்திரம் உரித்துறுதிச் சான்றிதழ் வழங்குவதன் மூலம் பிணக்குகளுள்ள காணிக்கான தீர்வொன்று இந்த செயற்திட்டத்தினால் வழங்க முடியாதிருந்தமையினால் இலங்கையின் ஒட்டுமொத்த காணிப் பிணக்குகளை தீர்ப்பதற்கு முடியாதிருந்தமை.

**சிபார்சுகள்**

உரிய நிறுவனத்தினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைக் கவனத்திற்கு எடுத்ததன் பின்னர் பின்வரும் திருத்தங்களின் போது பின்வரும் சிபார்சுகளில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

(i) அதிகாரச்சட்டத்தில் செய்வதற்கு திட்டமிடப்பட்ட திருத்தங்களை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

(ii) அதிகாரச்சட்டத்தின் விசேட பிரிவுகள் தொடர்பாக விளக்கமளிக்கும் வசனங்கள் மற்றும் விளக்கமளித்தல்களை உள்ளடக்குதல்.

(iii) ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் நிறுவனத்தினதும் நோக்கெல்லை மற்றும் அதிகாரம் தொடர்பாக போதியளவான தகவல்களை உள்ளடக்குதல்.

(iv) அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட காரணங்கள் தொடர்பான சகல தரப்பினருக்கும் அறிவிக்கும் வேலைத் திட்டமொன்றை அமுல்படுத்துதல்.

**நிறுவனத்தின் கருத்துரைகள்**

தொடர்பு 3.7.1(அ) பந்தி

(i) ''உரிமைகள் தீர்த்தல் ஆணையாளர், பிரதி.ீ. உதவி ஆணையாளர்களின் பொறுப்புக்கள் மற்றும் செயற்பாடுகளை விளக்குவதற்காக தேவையான பிரிவுகளை அதிகாரச் சட்டத்தின் உத்தேசத்திட்டத்தின் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.''

(ii) ''உரித்துறுதி தொடர்பான பதிவாளரின் அதிகாரங்கள், செயற்பாடுகளை அர்த்தமுள்ளதாக்குவதற்கான தேவையான பிரிவுகளை அதிகாரச் சட்டத்தின் உத்தேசத்திட்டத்தின் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.''

(iii) ''உரித்துறுதி பதிவு செய்தல் அதிகாரச்சட்டத்தை அமுல்படுத்தும் போது அந்தப் பிரிவில் நொத்தாரிசு அதிகாரச்சட்டங்கள் மற்றும் மோசடிகளைத் தடுக்கும் கட்டளைச் சட்டம் மற்றும் பிணக்குகளைக் குறைப்பதற்காக தேவையான ஏற்பாட்டு விதி வரைவு வழங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரமாண வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ''

**தொடர்பு 3.7.2 ஆம் பந்தி**

12 ஆவது பந்தியின் வர்த்தமானி அறிவித்தலில், வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக உரிய பிரதேசத்தில் பகிரங்க இடங்களில் பகிரங்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உரித்துறுதி பதிவு செய்யும் அதிகாரச் சட்டத்தினை ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட விசேட குழுவில் அதிகாரச் சட்டத்தை அமுல்படுத்தும் போது ஏற்பட்ட பிணக்குகள் தொடர்பாக கலந்துரையாடி திருத்தங்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 4. ஒட்டுமொத்த பொழிப்பு

இதுவரையிலும் காணப்பட்ட உறுதி முறைமைக்குப்பதிலாக வழங்கப்படுகின்ற உரித்துறுதிச் சான்றிதழின் மூலம் காணி உரிமையாளர்களுக்கு எழுந்திருந்த அனேகமான காணி தொடர்பான சச்சரவுகள் மற்றும் காணி மாற்றங்களின் போது பல்வேறு தரப்பினர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட முறையற்ற நடவடிக்கைகளால் பிம்சவிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பெருமளவில் விலக்கப்பட்டமையை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

மிகவும் துரிதமாக தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் அதன் போது மனித வளம் மற்றும் ஏனைய வளங்களை உரிய பிரகாரம் பயன்படுத்தப்பட வேண்டியிருந்தது. பிரதேச ரீதியில் அலுவலகங்களை ஸ்தாபித்தல், அலுவலகங்களுக்கிடையே தொடர்புகளை வலுப்படுத்துதல் என்பன ஒரு அமைச்சின் கீழ் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு தொடர்பான நிறுவனங்களைக் கட்டுப்படுத்துதலின் மூலம் மேற்பார்வை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு உரித்துறுதிச் சான்றிதழ் தயாரித்தல் மற்றும் காணி உரிமையாளர்களுக்கு அவற்றை வழங்குவதை துரிதப்படுத்த முடியும்.

இதன் போது அளவை நடவடிக்கைகள் அனேகமாக விரைவாக மேற்கொள்ளப்படுவதுடன் அதற்கு ஒப்பாக விநியோகிக்கப்படுகின்ற சான்றிதழ்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். உரித்துறுதிச் சான்றிதழ் தயாரிப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊக்குவிப்புப் படிக்கு ஒப்பீடாக காணி உரிமையாளர்களுக்கு வழங்கப்படுகின்ற சான்றிதழ்களின் எண்ணிக்கையும் வருடத்திற்கு வருடம் அதிகரிக்கப்பட வேண்டும். நில அளவையாளர் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறைமையில் அவர்களினால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் வசதிகளை

கவனத்திற்கொண்டு இலக்கிடப்பட்ட காணி அளவினைத் தீர்மானிக்க வேண்டியிருந்ததுடன் ஊக்குவிப்புக் கொடுப்பனவு கணிப்பீடு செய்யும் போது மாதாந்த அடிப்படை கவனத்திற் கொள்ளப்பட்டு உரிய சுற்றுநிருபம் திருத்தப்படுமாயின் அரசாங்கத்திற்கு பாரியளவிலான பணத்தைச் சேமிக்க முடியும்.

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட பணத்தில் அதிகளவான பணம், உபகரணங்கள் மற்றும் வாகனங்களை கொள்வனவு செய்தல் போன்ற ஏனைய தேவைகளுக்காக செலவிடப்பட்டிருந்தன. அதனால் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு அத்தியவசியமான செலவினங்கள் மாத்திரம் செய்யப்பட்டிருக்குமாயின் உரித்துறுதிச் சான்றிதழுக்கான செலவினங்களைக் குறைக்கக் கூடியதாக இருந்திருக்குமென அவதானிக்கப்பட்டது. அரசாங்கத்தின் பணத்தைச் செலவிடும் போது அது தொடர்பாக உரிய மதிப்பீட்டிற்கு உள்ளாக்குதல் மற்றும் செயல்முன்னேற்றத்தையும் அவ்வப் போது மதிப்பீட்டிற்கு உள்ளாக்குதல் வேண்டும். வேலை பூர்த்தி செய்யப்பட்ட பிரதேச அலுவலகங்களை மூடிவிட்டு ஒரு மாவட்டத்திற்கு ஒரு அலுவலகத்தை அமைத்தல் பயனுள்ளதாகும்.

அவ்வாறே இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் போது ஆரம்பக் கட்டத்தின் போது ஏற்பாடக்கூடிய குறைபாடுகளினால் சரியான உரித்தின்றிய நபர்களுக்கு உரித்துச் சான்றிதழை உரித்தாக்குவதற்கான வசதியளிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உரித்துச் சன்றிதழை மீள இரத்துச் செய்வதற்கு காணி உரிமை நிர்ணய ஆணையாளரின் அதிகாரத்திற்குரிய அதிகாரச்சட்டத்தின் கீழ் உரித்தின்றியமை தொடர்பான காரணம் மற்றும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்தும் போது ஏற்படுகின்ற சில பலவீனங்களினால் அனேகமான பொதுமக்களுக்கு இதுவரையிலும் காணப்படாத பல்வேறு காணிப் பிணக்குகளுக்கு முகங்கொடுக்க வேண்யேற்பட்ட காரணத்தினலும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றியடையச் செய்யும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவைகளாக இருந்தது.

காணிக் கூறுகள் தொடர்பாக சகல தகவல்களுக்கும் தரவு முறையொன்றை ஸ்தாபித்து வலைப்பின்னல் வசதிகளின் மூலம் உரிய தகவல்களைப் பெறக்கூடிய வகையில் தகவல் முறைமையின் செயற்பாடுகளைத் துரிதப்படுதுதல் வேண்டும். தற்போது காணப்படுகின்ற காணி தொடர்பான அதிகாரச்சட்டத்தில் இனங்காணப்பட்ட குறைபாடுகளை விரைவாக திருத்துவதன் மூலம் உரித்துறுதிச் சான்றிதழ் விநியோகிக்கும் தாமதத்தை குறைக்ககூடியதாக இருக்கும் என அவதானிக்கப்பட்டது. அரசாங்கத்தின் இலக்கான 2021 ஆம் ஆண்டளவில் சகல காணி உரிமையாளர்களுக்கும் காணிகளின் சரியான உரித்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென அவதானிக்கப்படு:கின்றது.